24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

சுடர் 34 | கதிர் 263 | ஆவணி 02 ஆம் நாள் | திங்கட்கிழமை 19 ஒகஸ்ட் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## பொலன்னறுவையில் ஒன்று சேர்ந்த மைத்திரிபால - சஜித் பிரேமதாச

### ஒருவரை ஒருவர் புகழ்ந்து தள்ளினர்



கொழும்பு, ஓக. 19
ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படும் அமைச்சர் சஜித் பிரேமதாசவும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் ஒரே மேடையில் நேற்று ஏறினர். இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து தள்ளினர்.
அரச தலைவர் தேர்தல் சூடு 21

## இரண்டு வயது குழந்தையின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19
வல்லிபுர ஆழ்வார் ஆலய வழிபாட்டுக்கு பெற்றோருடன் சென்ற இரண்டு வயதுக் குழந்தையின் இரண்டு பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.
ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த குடும்பத்தினர் 21

# பிரபாவின் பெயரைக் கூறி வாக்குக் கேட்க மகிந்த ராஜபக்சவுக்கு வெட்கமில்லையா?

### ரணில் விக்கிரமசிங்க பதிலடி



கொழும்பு, ஒகஸ்ட் 19
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் அவர் தலைமையிலான விடுதலைப் போராட்டத்துக்கும் முடிவுகட்டிவிட்டு, அவரின் பெயரைப் பயன்படுத்தி வாக்குக் கேட்பதற்காகத் தமிழ் மக்களிடம் சரணாகதி அடைவதில் வெட்கம் இல்லையா? ராஜபக்ச அணியினர் எப்படியெல்லாம் அழுது ஓலமிட்டு வாக்குப் பிச்சை கேட்டாலும் அவர்களுக்குத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டார்கள். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, 21

## கோத்தா போட்டியிட வாய்ப்பில்லை

கொழும்பு, ஓக. 19
நாட்டின் சட்டத்துக்கு அமைவாக கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை. அவர் தற்போதும் அமெரிக்க குடிமகன் என்பதே இதற்கு காரணம். இவ்வாறுமகிந்தஅணி 21

## வடக்குக்கும் வருகிறார் கோத்தபாய

யாழ்ப்பாணம், ஓக. 19
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கோத்தபாய ராஜபக்ச விரைவில் வடக்குக்குவருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதே வேளை, சிறி 21



### வேட்பாளராக அநுரகுமார அறிவிப்பு

## 20ஆண்டுகளின் பின்னர் அரச தலைவர் தேர்தலில் களமிறங்குகின்றது ஜே.வி.பி.

### காலிமுகத்திடலில் மக்கள் வெள்ளம்

கொழும்பு, ஓக. 19
மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளது. அந்தக் கட்சியின் சார்பில் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசநாயக்க போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அரச தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் அறிவிப் 21

## பருத்தித்துறையில் 4 மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 19
வெளிமாவட்ட மீனவர்களைத் தாக்கியதாகவும், அவர்களின் உடைமைகளை பறிமுதல் செய்ததாகவும் தெரிவித்து பருத்தித்துறையைச் சேர்ந்த 4 மீனவர்கள் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும், தாம் அவ்வாறான எந்தவொரு செயற்பாட்டிலும் 21

# கொலைகாரர்களினதும் கொள்ளைக்காரர்களினதும் ஆட்சியை அடியோடு இல்லாதொழிக்கவேண்டும்

### மாற்றத்துக்காக புதிய பாதையில் இணையுமாறு அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார அறைகூவல்

கொழும்பு, ஓக. 19
கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் ஆட்சிக்கு வந்தமையால், இந்த நாடே இன்று இலஞ்சம் ஊழலால் நிரம்பிப் போயுள்ளது. இவற்றையெல்லாம் அடியோடு இல்லாதொழிக்க வேண்டும். இவற்றை வேரறுக்கும் எமது இந்தப் புதிய பாதையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளராக 21

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
→ ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
→ பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
→ அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
ஹரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
021 222 2737

# நாட்டின் அந்நியச் செலாவணியில் 40 வீதமானது தமிழர்களுடையது

*வடக்கு ஆளுநர் இப்படித் தெரிவிப்பு*

வவுனியா, ஓக. 19
நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானத்தில் 40 சதவீதம் தமிழர்களால் கிடைக்கின்றது இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவு என்ற இயக்கம் மனிதாபிமானத்தின் அடிப்படையில் நாகரிகத்தைக் கொண்ட ஓர் இயக்கமாக இருக்கிறது. அது மனிதாபிமான ரீதியான நுண்கடன்களை வழங்கி மக்களுக்கு உதவிசெய்திருந்தது. ஆனால் இப்போதும் நுண்கடன் நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றிடம் மனிதாபிமானத்தைக் காணவில்லை. உலகின் பல்வேறு நாடுகளில் கூட்டுறவின் மூலமான செயற்பாடுகள் தற்போதும் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன.

எனது அனுபவத்தின் பிரகாரம் கூட்டுறவுக்குப் பின்னால் இருக்கும் மாபெரும் சக்தி பெண்களின் சக்தியாகவே இருக்கும். எனவே இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி என்ற தாய் வங்கி ஒன்றை உருவாக்கியுள்ளன. இதன்மூலம் நீங்கள் செய்துகொண்டிருக்கும் பணியை இன்னும் வலுவாகச் செய்துகொள்வதற்கான தேசிய, பன்னாட்டு ரீதியிலான வழிமுறைகள் உங்களுக்குக் கிடைக்கும்.

இலங்கையின் பிரதான வருமானமாக தற்போது அமைந்திருப்பது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் அங்கு உழைத்து அனுப்பும் அந்நிய செலாவணிப் பணமே. அது 7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகின்றது. அந்த தொகையில் 40 சதவிகிதமானது தமிழர்கள் அனுப்பிவைக்கும் பணமாக இருக்கிறது. இந்தத் தொகையில் ஒரு சதவீதத்தையாவது, எமது வங்கி மூலம் பராமரிக்கமுடியுமாக இருந்தால் அது தேசிய அளவிலான வங்கியாக மாறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இது தொடர்பாக நாம் மத்திய வங்கி ஆளுநருடன் கதைத்து வருகிறோம். எனவே எதிர்காலத்தில் வணிக வங்கிகளைவிட கூட்டுறவு வங்கிகள் பெருவளர்ச்சியை அடையும் அதனூடாக மக்களுக்குக் கிடைக்கும் சேவைகள் அதிகரிக்கும் - என்றார். (ம-110)

# மந்திரிமனையை உரிமைகோருபவர் சிங்கள பௌத்தத்தின் கையாள்

*கூறுகிறார் விக்கி*

யாழ்ப்பாணம், ஓக. 19
மந்திரிமனையை உரிமைகோருபவர் சிங்கள- பௌத்தத்தின் கையாள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இவ்வாறான ஒரு ஓலையுடன் எமது அரச திணைக்களத்துக்கு வந்திருப்பார்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய முன்றிலில், ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான மதிப்பளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் புராதனச் சின்னங்களில் ஒன்றான மந்திரிமனையை உரிமைகோரி ஓலைச்சுவடி ஒன்றுடன் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் யாழ்ப்பாணம் காணிக் கந்தோரில் பிரசன்னமாகியிருந்ததாக நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள்.

அந்தப் பெருமகனார் சிலவேளை சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையைப் படித்துத்தான் அவ்வாறு செய்தாரோ நானறியேன்! சுந்தரமூர்த்தி நாயனாரை தடுத்தாட் கொள்வதற்காக சாட்சாத் சிவனே பொய்யான ஓலைச்சுவடி ஒன்றுடன் தோன்றியது போல இவரும்; பழைய ஓலைச்சுவடியொன்றைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்.

ஆனால் வந்தவர் சிவனார் அல்ல. அரசின் அல்லது சிங்கள பௌத்தத்தின் கையாள் என்பதை நாம் உணர வேண்டும். எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இவ்வாறானதொரு ஓலையுடன் எமது அரச திணைக்களம் ஒன்றுக்கு வந்திருப்பார்? சில திணைக்களங்களை சிங்கள பௌத்த அரசானது தமது தேவைகளை முழுமையாகச் செய்யப் பாவித்து வருகின்றார்கள். நீரியல் திணைக்களம், கனியவளங்கள் திணைக்களம், வன இலாகா, தொல்பொருள் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் என பல திணைக்களங்களையும் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உள்ளடங்கிய அதிகாரசபைகளையும் இவ்வாறான ஓலைச்சுவடி போன்ற பல புனைகதைகளுடன் தான் அவற்றை வழிநடத்தி வருகின்றன என்று கொள்ள இடமிருக்கின்றது. எனவேதான் நாம் விழிப்புணர்வுடன் செயலாற்ற வேண்டுமென குறிப்பிடுகின்றேன்.

இன்றைய சூழலில் தமிழர்களுக்கென்று ஒரு தனியான தொடர்புடைய பிரதேசம் இருக்கக்கூடாது என்பதில் அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதுபோன்ற கெடுபிடிகள் தான் அரை நூற்றாண்டுக்கு முன்னர் வேறு எந்த வழிமுறைகளும் காணப்படாத நிலையில் 'சாம பேத தான தண்டம்' என்ற நான்கிலும் இறுதி வழிமுறைக்கு இளைஞர்களைத் தூண்டியது. போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாக எண்ணி அரசு மார்தட்டிக் கொள்ளலாம். ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தமிழர்களின் உணர்வுகள் மௌனிக்கப்படவில்லை என்ற விடயத்தை அரசும், பெரும்பான்மை ஆதிக்கவியலாளர்களும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது ஒரு சக்தி அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கின்றபோது அதனை வெல்வதற்கு தமிழ் மக்களின் ஆதரவைத் தேடி அரசு முழந்தாளிட்டு நிற்கின்ற ஒரு நிலை விரைவில் ஏற்படலாம். அப்பொழுதும் எமது தமிழ் அரசியல் தலைவர்கள் நிபந்தனைகள் எதுவுமற்ற ஆதரவை வழங்கத் தயாராக இருப்பார்களோ நான் அறியேன். எனவேதான் மக்கள் சக்தியாகிய அந்த மாபெரும் சக்தியை நாங்கள் எல்லோரும் சேர்ந்து மேலோங்கச் செய்ய வேண்டும். அந்த வகையில் தமிழ் மக்களின் ஒற்றுமை பலப்படுத்தபட வேண்டும் - என்றார். (ஒ.5)

# உணவு பாதுகாப்பு தொடர்பில் தெளிவூட்டல் செயலமர்வு

வவுனியா,ஓக.19
உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பசுபதிராஜா தலைமையில் இடம்பெற்ற செயலமர்வில் வவுனியா நகரிலுள்ள உணவகங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக உணவக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (ஜ)

# தென்மராட்சியில் தற்போது பரவலாக டெங்குக்கு எதிரான விழிப்புணர்வுகள்

சாவகச்சேரி, ஓக. 19
தென்மராட்சி பிரதேசத்தில் மீண்டும் டெங்கு தலைதூக்காமல் இருக்க சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தினமும் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்குவதுடன் கிராமங்களில் விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றனர்.

பிரதேசத்தில் அண்மையில் மழை பெய்ததையடுத்து நீர் ஏந்துபொருள்களில் டெங்கு தலைதூக்கும் அபாயம் உள்ளதால், மக்கள் தமது காணி மற்றும் குடியிருப்பு பகுதிகளில் காணப்படும் நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்துவதுடன் காணி அருகே காணப்படும் பற்றைகளை வெட்டி துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றது. அத்துடன் கிராமம் கிராமமாக பிரிவு பொதுசுகாதாரப் பரிசோதகர் தலைமையில் செல்லும் சுகாதாரத் தொண்டர்கள் மக்களை ஒன்று திரட்டி டெங்கு நோயால் ஏற்படக் கூடிய விழிப்புணர்வு கருத்தமர்வுகளையும் நடத்தி வருகின்றனர். (ம-9)



# வரணி சி.சபாவின் நூல்கள் வெளியீடு

கொடிகாமம், ஓக. 19
கலாபூசணம் வடவரணி சி.சபாவின் இரு நூல்கள் சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் வெளியிடப்பட்டன.

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத் தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதிப்புறு விருந்தினர்களாக நுவரெலியா ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வி.க.கமலநாதன், ஓய்வு நிலை அதிபர் சி.பவளேந்திரன், முன்னாள் வடமாகாண உறுப்பினர் கே.சயந்தன், வரணி மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி பாலாம்பிகை சிவகுமரன், முன்னாள் கிராம அலுவலர் ஆ.சதாசிவம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.மதன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் ம.இரகுநாதன் நூல்களை வெளியீடு செய்ய, மரணிக்கும் மண்வாசனை நூலின் முதற்பிரதியை வரணி வடக்கு இலக்கிய ஆர்வலர் க.குணரத்தினமும் ஓவியமும் சிற்பமும் என்ற நூலின் முதற்பிரதியை புலோப்பளை இலக்கிய ஆர்வலர் வ.செல்வராசாவும் பெற்றனர். (ம-159,122)

# பொலிஸ் அதிகாரிக்கு எதிராக பெண்ணொருவர் முறைப்பாடு

மன்னார், ஓக. 19
தலைமன்னார் கிராமப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர், தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி தன்னுடன் தவறாக நடந்து கொள்ள முயற்சிக்கிறார் என்றும்- இரவு நேரங்களில் தொடர்ச்சியாக அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றார் என்றும்- எனவே தனக்கும் தனது குடும்பத்துக்கும் உரிய பாதுகாப்பை வழங்குமாறு கோரி அவர் முறைப்பாட்டில் கோரியுள்ளார்.

**தலைமன்னார் கிராமப்பகுதியில் வசிக்கும் எனது கணவர் முச்சக்கர வண்டிச் சாரதி. ஒருநாள் அவசரதேவையாக முச்சக்கர வண்டியைக் கொண்டுசென்றபோது வாகன வரிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை வீட்டிலே விட்டுச் சென்று விட்டார்.**

எனது தம்பியிடம் குறித்த ஆவணங்களைக் கொடுத்தனுப்பினேன். சற்றுநேரம் கழித்து எனது தம்பி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் என்று அலைபேசியில் தெரிவிக்கப்பட்டது.

என்னையும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. பொலிஸ் நிலையம் சென்றபோது எனது தம்பி மாடு திருட முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் -தம்பியை விட வேண்டும் என்றால் தான் அழைக்கும் இடத்துக்குத் தனியாக வரவேண்டும் என்றும்- குறித்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார் என்று அந்தப் பெண் குற்றஞ்சாட்டியுள்ளார். அதனால், தான் கோபமடைந்து பொலிஸ் நிலையத்திலிருந்து நள்ளிரவே வெளியே வந்ததாகவும் அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிறிது நேரத்தில் குறித்த பொலிஸ் அதிகாரி எனது அலைபேசிக்கு அழைப்பு மேற்கொண்டு தன்னுடைய நிபந்தனைக்கு அடிபணியுமாறு கோரியுள்ளார். கணவனின் அறிவுரைப்படி குறித்த பொலிஸ் அதிகாரியின் உரையாடலை பதிவு செய்துள்ளார்.

பின்னர் மன்னார் பொலிஸ் அத்தியட்சகரிடம் குறித்த உரையாடல்களை ஒப்படைத்துள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த பொலிஸ் அதிகாரியை இடம்மாற்றம் செய்கிறேன் என்று பல நாள்களுக்கு முன்னர் அத்தியட்சகர் வாக்குறுதியளித்திருந்தார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-56)



# விட்டுக் கொடுக்கும் மனம் வேண்டும்

அந்த ஊரின் நடுவே ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்க ஒரு பாலம் ஒன்றிருந்தது. அது மிகவும் குறுகிய பாலம். ஒருவர் போனால், ஒருவர் வர முடியாத அளவுக்குக் குறுகியது.

ஒருநாள் பாலத்தின் ஒருமுனையிலிருந்து ஆடு ஒன்று பாலத்தைக் கடக்க எண்ணி பாலத்தில் நடக்க ஆரம்பித்தது . அதே நேரத்தில், எதிர்முனையில்இருந்தும், ஆற்றினைக்கடக்கபாலத்தில்ஒரு ஆடுவர ஆரம்பித்தது.

இரு ஆடுகளும், நடுபாலத்தில்சந்தித்தன. முதல்ஆடு, "வழிவிடு. நான் தான் முதலில் கடக்க ஆரம்பித்தேன்"என்றது.

எதிர் முனையில் இருந்து வந்த மற்ற ஆடோ, "முடியாது. நான் தான் முதலில் கடக்க ஆரம்பித்தேன்.. நீ வழிவிடு" என்றது.

இரண்டு ஆடுகளும். ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காமல் .. நடுப்பாலத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஒருகட்டத்தில், ஒன்றை ஒன்று முட்டிக் கொண்டு, கால்கள் தடுமாற, பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்தன. இரு ஆடுகளையும் ஆறு அடித்துச் சென்றது.

ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததால் தங்கள் உயிரை இழந்தன. வாழ்விலும், நாம் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கைக் கொண்டால், வாழ்வு சிறப்பாக அமையும்.

# இசை



எல்லாருக்கும் புரிகிற ஒரு மொழி இசை என்றே கூறலாம். வார்த்தைகளால் எம் உணர்ச்சிகளை வெளிப்படுத்து வதை விட, இசையால் வெளிப்படுத்துவது மிகவும் இலகு வாக இருக்கும். அடிப்படையில் இசை என்பது வேறு ஒன்றும் இல்லை. 'பல ஒலி அதிர்வெண்கள் கலந்து, வித விதமான வடிவங்களில் காற்றில் மிதந்து, நம் செவிகளை அடைவது தான் இசை' என்று கூறுகிறோம்.

எம் கண்கள் ஒளியை எவ்வாறு செயலாக்கம் செய்கிறதோ, அதே போன்று தான், எம் காதுகளும் ஒலியைசெயலாக்கம்செய்கின்றன. உண்மையைசொல்லப்போனால், நாம்பிறப்பதற்குமுன்பே, இசையைக் கேட்க ஆரம்பித்து விடுகிறோம்.

தாயின் கருவறையில் இருந்த போது, நம் கண்களால் ஒன்றுமே பார்க்க முடியாமல் இருந்தோம். ஆனால், எம் காதுகளால் எப்போதுமே இசையை ரசித்துக் கொண்டு தான் இருந்தோம்.

எம் தாயின் இதயத்துடிப்புதான் அது. எப்போதுமேஎமக்கு தாலாட்டு போல் அந்த இதயத் துடிப்பின் இசையில், நாம் உறங்கிக் கொண்டு இருந்தோம்.

மனித உடலில் இருக்கும் ஒரு சுவாரசியமான குணம், உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான சம்பவங்கள், நம் உடலுக்குள் நடைபெறும்போது, எம் மூளை, மகிழ்ச்சி மற்றும் திருப்தி போன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறது. அதற்கான ஹார்மோன்களை உறுப்புகள் சுரக்க ஆரம்பிக் கின்றன. உதாரணத்துக்கு, பசிக்கும் போது, எம் தேவைக்கு ஏற்ற அளவு உணவு சாப்பிட்டு, பசி தீர்ந்தவுடன் உடனடியாக சந்தோசமும், திருப்தியும் அடைந்து விடுகிறோம்.



ஆனால், உண்மையில் அந்நேரம் என்ன நடை பெறுகிறது என்றால், 'டோபாமைன்' எனப்படும் வேதி பொருள், எம் மூளைக்குள் வெளியிடப்படுகிறது. இது நரம்புக்கடத்தியாகப் பணிபுரிந்து, சந்தோசமும், திருப்தியும் காரணமாக இருக்கிறது.



## மரண அறிவித்தல்



### திருமதி ஜெகதீஸ்வரி காராளபிள்ளை

யாழ். வேலணை மேற்கு, வேலணை 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி காராளபிள்ளை 17.08.2019 சனிக்கிழமை இலங்கையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காராளபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி- அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் வாகினி (கனடா), தர்சினி, சுதர்சினி, சிவகுமாரி (பிரான்ஸ்), சூரியகுமாரி, இளங்குமரன் (கனடா, New Kalyani Restaurant), கார்த்திகா (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் சற்குணராஜா (கனடா), தெய்வேந்திரம் (கந்தையா & சன்), சதானந்தராசா, சிவகுமார் (Business, பிரான்ஸ்), விஜிதரன், சிரோஜா (கனடா), குமரசோதி (கனடா - CEO Golumbia Printing) ஆகியோரின் அன்பு மாமியும் டினேஸ் (கனடா), தாட்சாயினி, சஞ்சய், திவாஜினி, அருணன், அட்சயா (பிரான்ஸ்), அபிநயா (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்), தீபிகா, அக்சரன் (கனடா), ஆதவ் (கனடா), ஆதிக் (கனடா), அகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டியாரும் காலஞ்சென்ற வீரசிங்கம், விஜயலட்சுமி மற்றும் சிவானந்தம், அருளானந்தம், சொரூபராணி, செல்வராணி, யோகலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (21.08.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் இறுதிக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

128, மைதான வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

076 400 8964, 077 063 9180, 077 240 5649, 077 494 9972

# நட்பு



வானத்தின் சொந்தம் விண்மீன்கள்
மலரின் சொந்தம் வண்டுகள்
காற்றின் சொந்தம் தென்றல்
நட்பின் சொந்தங்கள் நல்ல நினைவுகள்

..................................

உரிமை கொண்டாடும் உறவை விட,
உறவைக் கொண்டாடும் நட்பே சிறந்தது.

..................................

நினைவில் வைத்து கனவில்
காண்பதல்ல நட்பு!.
மனதில் புதைத்து மரணம் வரை தொடர்வது
தான் உண்மையான நட்பு!!.

..................................

என் வாழ்க்கைத் தோட்டத்தில் எத்தனையோ
'நட்பு' மலர்கள் - ஆனால்
உன் நட்பைப்போல் எதுவும் மலர்ந்து
மணம் வீசவில்லை
கால வெள்ளத்தில் சிதறுண்டு போகும்

உறவுகளில்
நட்பாய் தொடர்வாயா
உண்மை நட்பே இறுதி வரை.

..................................

வானமும்பூமியும்இறைவனின்சொத்து.
இன்பமும் துன்பமும் மனிதரின் சொத்து.
நீயும் நானும் கடவுளின் படைப்பு,
என்றும் பிரிய கூடா "நட்பு'

விற்பனைக்குண்டு
பழைய சுண்ணாம்புக்கட்டட வீடு, கதவு, யன்னல், நிலை மற்றும் கோப்பிசத்துடன் விற்பனைக்குண்டு
077 691 3024

## தெரிந்து கொள்வோம்

இடப்பெயர்ச்சி அடையும் தாவரம்
- வால்வாக்ஸ்
சக்தி தரும் உணவுச் சத்து
- காபோவைதரேட்
மறுசுழற்சி செய்யும் விலங்கினம்
- மண்புழு
எலி ஒருமுறை போடும் குட்டிகளின் எண்ணிக்கை - 10-15
நிறையின் அலகு என்ன - கிலோகிராம்
காலம் / நேரத்தின் அலகு என்ன
- வினாடி
மின்னோட்டத்தின் அலகு என்ன
- ஆம்பியர்
விசையின் அலகு என்ன? - நியூட்டன்
நீளத்தின் அலகு என்ன? - மீற்றர்
ஒரு வருடத்தில் உள்ள வாரங்களின் எண்ணிக்கை - 52

இந்திய விபூதி விற்பனைக்கு
எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ்
ஜவ்வாது வாசனை விபூதியை (1kg )
மொத்தமாகவும் (ரூபா 100), சில்லறையாகவும்
(ரூபா 110) பெற்றுக்கொள்ளலாம்.
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
021 222 2567

# உங்கள் நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்

## புனர்பூசம்

புனர்பூசம் நட்சத்திரத்தை புனர்வஸு என்றும் சொல்வார்கள். 'புனர்' என்றால் 'மீண்டும்' என்று பொருள். 'வஸு' என்பது 'சிறப்பு' அல்லது 'நல்லது' என்பதைக் குறிக்கும். 'மீண்டும் சிறப்பு' என்பதே இந்த நட்சத்திரத்தின் பொருள்.

**பொதுவான குணங்கள்**: தெளிவான அறிவு, பற்று, பாசம், நேர்மை, நியாய உணர்வு, தயாள குணம், பொறுமை போன்ற உயரிய குணங்கள் இவர்களுக்கு உரியது. நல்லதையே நினைத்து நல்லதையே செய்பவர்கள். பிறர் நலம் நாடுபவர்கள். ஆன்மிகத் துறையிலும், பொதுச் சேவையிலும் ஈடுபாடு கொண்டவர்கள் பலர் இந்த நட்சத்திரக்காரர்களாக இருப்பார்கள்.

**சிறப்பியல்புகள்:** புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மிகுந்த நேர்மையான குணமும், ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்பவராகவும் இருப்பவர்கள். புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எந்த ஒரு செயலையும் அடக்குமுறையால் சாதிப்பதை விட, தங்களின் அன்பான விட்டுக் கொடுத்து செல்லும் தன்மையால் சாதிப்பதையே விரும்புவர். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எப்போதும் பொய் பேசுவதை விரும்பமாட்டார்கள். உண்மை பேசுவதால் தங்களுக்கு இலாபம் இல்லை என்றாலும் உண்மையையே பேசுவார்கள்.
இவர்களின் பேச்சில் சாதுரியம் நிறைந்திருக்கும். எதிலும் சிக்கனத்தை கடைபிடிக்கும் குணம் இவர்களிடம் இருக்கும். இவர்களில் பெரும்பாலானவர்கள் பித்த சாரீரம் கொண்டவர்களாக இருப்பார்கள்.
எனவே அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டு குணமாவார்கள். பால், நெய், தயிர் போன்ற உணவுகளை அதிகம் விரும்பி உண்ணத் கூடியவர்களாகவும் இருப்பார்கள். புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் அழுத்தந்திருத்தமாக பேசக் கூடியவர்களாக இருப்பார்கள். நெடுந்தூரம் நடந்து செல்லவேண்டும் என்றாலும் அலுத்துக் கொள்ளாமல் நடக்கும் ஆர்வம் கொண்டவர்கள்.
புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்ட பிறகு உலகமே எதிர்த்தாலும் எக்காரணம் கொண்டும் தாங்கள் கொண்ட கொள்கையில் இருந்து பின்வாங்க மாட்டார்கள். தன்மானம், சுய மரியாதைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர்கள். புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் இந்த இரண்டுக்கும் பங்கம் வரும்போது சீறும் சிங்கமாக மாறுவார்கள்.
தங்களுக்கு அடுத்த வேளை உணவு கிடைக்காது என்ற போதிலும் பிறரை ஏமாற்றி பிழைப்பது, சத்தியத்திலிருந்து விலகிய வாழ்க்கை வாழ்வது போன்றவற்றை புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் எப்போதும் செய்வது கிடையாது. பிறரிடம் இருந்து இலவசமாக எதையும் பெற்றுக் கொள்ள மிகவும் தயக்கம் காட்டுவார்கள். ஆனால் தங்களால் முடிந்த எத்தகைய உதவிகளையும் பிறருக்கு செய்த வண்ணமே இருப்பார்கள்.
புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் குறிப்பாக மனிதர்களின் பசியைப் போக்கும் அன்னதானம் செய்வதில் மிகவும் விருப்பம் கொண்டவர்கள். ஒரு போதும் தாங்கள் செய்கின்ற உதவிகளை பிரபலப்படுத்த மாட்டார்கள். தங்களின் திறமையான பேச்சினால் தங்களுக்குத் தேவையான பல காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். பிற நபர்களுடன் பழகுவதற்கு முன்பாக அவர்களை தங்கள் பார்வையாலேயே அலசி அவர்களின் குணம் எப்படிப்பட்டது என்பதை ஓரளவு யூகித்துவிடும் திறமை பெற்றவர்களாக புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் இருக்கிறார்கள்.



## பூசம்

பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திறமைசாலிகள். புத்திக்கூர்மை உள்ளவர்கள். எதையும் எளிதில் கிரகித்துக்கொள்ளக்கூடியவர்கள். சுதந்திரமாக வாழ நினைப்பவர்கள். அடக்கமானவர்கள். அதே நேரம், ஆத்திரமும் கோபமும் உள்ளவர்கள். பூசம் நட்சத்திர சிறப்பியல்புகள் ஜோதிட சாஸ்திரத்தில் சனீஸ்வரன் நீதிமான் என வர்ணிக்கப்படுகிறார்.
சனீஸ்வர பகவானுக்கு உரிய பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நீதி, நேர்மை, நியாயத்துக்காகப் பாடுபடுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உடல் உறுதியும், மன உறுதியும் அதிகமுண்டு. எத்தகைய சிக்கலான பிரச்சினைகளுக்கும் சுலபமாக தீர்வுகளைக் கண்டு செயற்படுவார்கள். ஆன்மிகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக பூச நட்சத்திரக்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் தங்களின் ஆன்மீக வாழ்க்கைக்காக தங்களின் குடும்பம், செல்வம் ஆகிய அனைத்தையும் துறந்து விடும் திட சித்தத்தையும் பெற்றிருப்பார்கள். இந்த நட்சத்திரக்காரர்கள் அனைவராலும் விரும்பப்படுகிற வர்களாக இருப்பார்கள்.
பலவகையான விடயங்களைப் பற்றியும் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும் என விரும்புவார்கள். எல்லா விடயங்களிலும் தூய்மை மற்றும் சுகாதாரத்துக்கு மிகுந்த முக்கி யத்துவம் அளிப்பார்கள். இவர்களில் பலர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தங்களின் கடுமையான உழைப்பின் மேலும் வாழ்வில் மிக உயர்ந்த நிலைக்கு செல்வார்கள். நெருக்கடியான நிலைகளிலும் திறம்பட செயலாற்றும் குணம் கொண்டவர்கள்.
சனி பகவானுக்குரிய நட்சத்திரமாக இருப்பதால் இவர்களில் பெரும்பாலானோருக்கு மனதில் ஏதேனும் இனம் புரியாத ஒரு சோகம் இருக்கும். பிறருக்கு தங்களால் முடிந்த எந்த வகையிலும் உதவி செய்வதற்கு தயாராக இருப்பார்கள். மற்றவர்களுக்கு சவாலாகவும், கடினமாக இருக்கும் விடயங்களையும் இவர்கள் தங்களின் திறமையால் எளிதில் சாதித்து வெற்றி பெறுவார்கள். ஒழுக்கமான வாழ்க்கை வாழவே விரும்புவார்கள். தவறு செய்தவர்களை மன்னிக்கும் குணம் இருக்கும். தங்களின் மனசாட்சிக்கு பயந்து நடப்பவர்களாக இருப்பதால் தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். உறவினர், நண்பர்கள், விருந்தி னர்களை உபசரிப்பதில் சிறந்தவர்கள். பொறுமை குணம் அதிகம் இருந்தாலும் இவர்களுக்கு சில சமயங்களில் சட்டென கோபம் ஏற்பட்டு விடும். தங்களின் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படும் போது எரிமலையாக வெடிப்பார்கள். வாழ்வில் எந்த ஒரு விடயத்திலும் சுலபத்தில் அஞ்சாமல், மன உறுதியுடன் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவார்கள். மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் இந்த நட்சத்திரக்காரர்கள் இருக்கிறார்கள். முக அமைப்பு பிறரை கவரும் வகையில் இருக்கும். பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் செய்நன்றி மறவாதவர்களாக இருக்கின்றனர். பாரம்பரிய பழக்க வழக்கங்களில் பற்றுடையவர்கள். அதேநேரம் புதுமையை வரவேற்கவும் தயங்காதவர்கள். மனதளவிலும் பிறருக்கு தீங்கு செய்வோர் நினைக்காதவர்கள். இந்த பூச நட்சத்திரக்காரர்களுக்கு சிறந்த கற்பனை வளம் அதிகம் இருப்பதால் கதை, கவிதை, கட்டுரை எழுதுதல் போன்ற துறைகளில் பிரகாசிப்பார்கள்.

# விரலில் வெள்ளி மோதிரம் அணிந்தால் அதிர்ஷ்டம் தேடி வருமாம்!

வெள்ளி என்பது வியாழன் கோளையும், சந்திரன் போன்றவற்றைக் குறிக்கிறது. எமது உடலில் உள்ள ஐம்பெரும் பூதங்களான நீர், கபம் இரண்டையும் சமநிலைபடுத்துகிறது. வேத சாஸ்திரங்களை எடுத்துக் கொண்டால் வெள்ளி உலோகம் அணிந்திருப்பவர்களுக்கு வாழ்க்கையில் அதிர்ஷ்டம், அழகு, செல்வம் மற்றும் சந்தோசம் என்று எல்லாம் கை கூடி வரும் என்று சொல்லப்படுகிறது.
நீங்கள் வியாழன் மற்றும் சந்திர கோள்களின் முழுப்பயனையும் பெற விரும்பினால் அதற்கு வெள்ளி உலோகம் சிறந்த ஒன்றாக விளங்குகிறது. மேலும் இதை நமது உடலில் அணியும் போது நமது உடலில் உள்ள கெட்ட நச்சுக்களை வெளியேற்றி உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.
வீட்டில் நிறைய வழிகளில் வெள்ளி பொருள்ளால் அலங்கரிக்கும்போது எமது வீட்டில் நேர்மறை எண்ணங்கள் உதயமாகின்றன.

அதேபோல் வெள்ளி அணிகலன்கள், வெள்ளி பாத்திரங்கள், வெள்ளி அழகு பொருள்கள் என்று வைக்கும் போது எமது உள்ளத்திலும் வாழ்க்கையிலும் நேர்மறை எண்ணங்கள் தோன்றுகின்றன.

**குழப்பங்கள் விலகும் :**
நீங்கள் சமாளிக்க முடியாத நோயுடனோ அல்லது மனக் குழப்பங்கள், பிரச்சினைகள் இவற்றுடன் காணப்பட்டால் அந்த சமயங்களில் இந்த வெள்ளி உலோகம் உங்கள் மனதில் ஒரு நிம்மதியையும் அமைதியான அலைகளையும் இட்டுச் செல்கிறது.

**ஆச்சரியமான பலன் :**
கடைசியாக இந்த மோதிரத்தை சந்தன கட்டையில் வைத்து முன்னாடி உள்ள ஆற்றல்களை எல்லாம் தூய்மை செய்து உங்கள் அழகான சுண்டு விரலில் அணிந்து கொள்ளுங்கள்.



இதற்கு அப்புறம் உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்கள் மற்றும் நீங்கள் செய்யும் செயல்களை கவனித்துப் பாருங்கள் கண்டிப்பாக ஆச்சரியமான பலன்கள் கிடைக்கும்.
வெள்ளி மோதிரத்தை அணிவதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று பார்த்தால் இது உங்கள் அழகை அதிகரிக்கும், உங்களது ஆளுமை திறனை வியாழன் மற்றும் சந்திரன் கோள்களோடு இணைக்கும், உங்கள் கோபத்தை கட்டுப்படுத்தி உங்களை எப்பவும் கூலாக சந்தோசமாக வைத்திருக்கும்.

**மூட்டு பாதிப்புகள் :**
உங்கள் ஜாதகத்தில் சந்திரன் வலுவிழந்து காணப்பட்டால், உங்கள் அறிவுபூர்வமான எண்ணங்கள் பலவீனமடைந்து மற்றும் நோய்கள் காணப்படும். ஆனால் இந்த வெள்ளி மோதிரம் சந்திரன் பார்வைக்கு வலுக் கொடுத்து பலம் தந்து உங்கள் இருமல், சளி, மூட்டு வலிகள் மற்ற எல்லா மூட்டு சம்பந்தப் பட்ட பிரச்சினைகள் இவற்றையெல்லாம் சரியாக்கும்.
நீங்கள் மோதிரமாக அணிய விருப்பம் இல்லையென்றால் வெள்ளி செயினாக அணிந்து கொள்ளலாம். இதுவும் வெள்ளி மோதிரத்தை போன்ற எல்லா நன்மைகளையும் அள்ளிக் கொடுக்கும். நீங்கள் இதை செயினாக அணிவதால் உங்கள் தொண்டை சக்கரத்துக்கு வலுக்கொடுத்து தொண்டை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், குரல் பிரச்சினைகள் போன்றவற்றைச் சரிசெய்யும்.

# தமிழில் தேசிய விருது பெற்ற ஒரே படம் ‘பாரம்’




இந்தியாவில் தயாராகும் திரைப்படங்க ளுக்காக ஆண்டுதோறும் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்களுக்கான விருது அண்மையில் அறிவிக்கப்பட்டது. இதில் சிறந்த தமிழ் திரைப்படங்களுக்கான பிரிவில் ‘பாரம்’ திரைப்படத்துக்கு விருது கிடைத்துள்ளது. ‘பாரம்’ படத்தை பிரியா கிருஷ்ணமூர்த்தி இயக்கியுள்ளார்.

‘பாரம்’ என்றால் தமிழில் சுமை என்ற மற்றொரு அர்த்தமும் உள்ளது. மனைவியை இழந்த இரவுக் காவலாளியின் வாழ்க்கையே இந்த ‘பாரம்’ படத்தின் கதை.


வாழ்க்கையின் கடைசி நாள்களில் உள்ள காவலாளி கருப்புசாமியை அவரது மகன் எவ்வாறு கவனித்துக் கொள்கிறார் என்பதே இந்த படத்தின் முக்கிய கரு.

வீட்டில் வயது முதிர்ந்து தங்களது கடைசி நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் முதியவர்களை அவர்களது வீட்டில் உள்ளவர்களால் கவனித்துக்கொள்ள முடியாத நிலையில் ‘கருணைக்கொலை’ என்ற பெயரில் நிறைய வயதானவர்கள் அவர்களின் குடும்பத்தினர்களால் கொல்லப்படுகின்றனர்.

இது இன்னும் சில கிராமங்களில் நடைமுறையிலேயே உள்ளது. ஓர் உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் தான் பாரம்.


இயக்குநர் பிரியா கிருஷ்ணமூர்த்தி

## கருத்துச் சித்திரம்




எனக்காக வாழ்ந்தேன்
சுயநலவாதி என்றது உலகம்
பிறருக்காக வாழ்ந்தேன்
பைத்தியக்காரன் என்றது
உலகம்..

பிக்பாஸ்
மதுமிதா



பச்சை
என்பதும் மூன்றெழுத்து.
கட்சி
என்பதும் மூன்றெழுத்து.
ரணில்
என்பதும் மூன்றெழுத்து.
வாக்கு
என்பதுவும் மூன்றெழுத்து.
வெற்றி
என்பதுவும் மூன்றெழுத்து.




## மூன்றெழுத்து வார்த்தைகள்


“ரணில்” எனும் மூன்றெழுத்து,
“தீர்வு” எனும் மூன்றெழுத்தை வழங்குவார் என்று,
“வாக்கு” எனும் மூன்றெழுத்தை வழங்கியவர்களின்,
“நெற்றி” எனும் மூன்றெழுத்தில்,
“நாமம்” எனும் மூன்றெழுத்தைப் போட்டு,
“ஏமாளி” எனும் மூன்றெழுத்தை அடைமொழியாக வழங்கி,
“இன்று” எனும் மூன்றெழுத்து நாளுடன்,
“நான்கு” எனும் மூன்றெழுத்து வருடங்கள் ஆகின்றன.



## பிக்பாஸ் 3 பரிதாபங்கள்













### பின்னால் இருந்து குத்துவதில்

பாகுபலிக்கு கட்டப்பா,
தர்ஷனுக்கு சேரப்பா!



## மரண அறிவித்தல்கள்

### திருமதி தேவகி பாலச்சந்திரன்



இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவகி பாலச்சந்திரன் 16.08.2019 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பாலச்சந்திரனின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இத்தியடிப்பிள்ளையார்
கோயிலடி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
கா.பாலச்சந்திரன்
(கணவர்)

0212271856

(1/32672)(II.17)

---



மலர்வு 20 . 03 . 1960

உதிர்வு 18 . 08 . 2019

### திருமதி மொறின் ஜெயபவானி எட்வேட் ரஞ்சித்

(பழைய மாணவி இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மொறின் ஜெயபவானி எட்வேட் ரஞ்சித் நேற்று (18.08.2019) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை எட்வேட் மேரி எலிசபெத் தம்பதியினரின் அன்பு மருமகளும் எட்வேட் ரஞ்சித்தின் அன்பு மனைவியும் பொலின் டொறின் ஆகியோரின் அன்பு சகோதரியும். கவிதா (கொழும்பு) நளின் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சித்தியும் சகன்யா, சஜிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (19.08.2019.) திங்கட்கிழமை முற்பகல் 10.30. மணியளவில் சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடைபெற்று ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பெரியமாவடி , சாவகச்சேரி


தகவல்:
கணவர்: 076 886 9663
சகோதரி:077 5242923

---

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 31 . 08 . 1965

மறைவு 20 . 07 . 2019

### அமரர் சாம்பசிவம் இரவீந்திரன்

மானிட வாழ்வு போதுமென்று இறைவனடி சென்றீரோ?
எம் பரிதவிப்பு தெரியவில்லையோ! இந்திரனே!
உங்கள் நினைவு நெஞ்சிருக்கும்வரை நிறைந்திருக்கும்
ஆண்டு பல கடந்தாலும் ஆறாது எம் துயரம்
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சந்தி!!!**

எமது குடும்ப உறவின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்,

இன்று (19.08.2019) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்வதுடன் மு.ப 11 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


இராஜ வீதி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்

---

சிவமயம்

## பாஷாண உத்வாசன, சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 06.12.1958

மறைவு 09.08.2019

கடந்த (09.08.2019) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள்

அவர்களின் பாஷாண உத்வாசனம் நாளை (20.08.2019) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு இடம்பெற்று, தொடர்ந்து மு.ப 10.00 மணிக்கு சபிண்டீகரணக் கிரியைகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

232, கனகரட்ணம் வீதி,
நாயன்மார்கட்டு.

குடும்பத்தினர்.

---

## மணிவிழா வாழ்த்து



Congratulations

Congratulations

### திருமதி பிரான்சிஸ்கா இராசநாயகம்

(கிறிஸ்தவ பாட ஆசிரியர் 22.03.1990 - 18.08.2019)

டிறிபேக் கல்லூரியில் சேவையை ஆரம்பித்து
இருபத்தொன்பது வருடங்களாய்
கண்ணியமாய் கடமைதனைச் செய்து
ஆசிரியப் பணியிலே மேன்மை பெற்று
நேசமுடன் கற்பிக்கும் மாதரசி
உண்மை நேர்மை கருணையொடு
உள்ளத்தில் தெய்வ பக்தி கொண்டெழும் பூபதியே !
சேவைதனை நயந்து வாழ்த்துகின்றோம்.

BEST Wishes

வட்டமேசை
யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை



பிறப்பு 25.03.1930

இறப்பு 16.08.2019

காரைநகர் இடைப் பிட்டியைப் பிறப்பிடமாகவும் அம்பிளா, பாலாவோடை, முரசுமோட்டை, பரந்தனை வசிப்பிடமாகவும் தற்போது ஆலடி காரைநகரில் வசித்து வந்த வருமாகிய திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை 16.08.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான (சீனியர்) முருகேசு சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கணக்குப்பதிவாளர், கல்வித்திணைக்களம் கிளிநொச்சி) சரவணப்பெருமாள் (சீநோர் மின் பொறியியலாளர்) மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சிவநாயகி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும், தேவகி - இராஜ்குமார் (லண்டன்), வத்சலா - குகதாசன் (லண்டன்) காந்தன் - காயந்திரி (லண்டன்), நாவேந்தன் (பொறியியலாளர் - லண்டன்)-மிதிலா, பரணீதரன் (பொறியிலாளர்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மாதவன், ஈஸ்வர், ஜோதி, சக்தி, பார்த்திபன், பாரதி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற இராமநாதன், சிவகாமன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பரணீதரன் - 077 609 3482

(1.10385) (13.17)

## மரண அறிவித்தல்



### திருமதி இம்மானுவேல் ஜெயராணி (வவா/ஜெயா)

யாழ். சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இம்மானுவேல் ஜெயராணி 12.08.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிறேட் பிரான்சிஸ் ராசு குணரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் திருச்செல்வம் லூத்தம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் இம்மானுவேல்(இரத்தினம்) இன் ஆருயிர் மனைவியும் லூட்சியாவின் அன்புத் தாயாரும், லூத்து பாலச்சந்திரன் (யாழ்ப்பாணம்), றெஜீனா சிவஞானம் (ஜேர்மனி), டெக்ஸ்டர் (ஜெறிம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை (ஜேர்மனி) மற்றும் மைக்கல் (யாழ்ப்பாணம்), ஜெயராஜ குலேந்திரன் கில்டா (யாழ்ப்பாணம்), பிலிப் யோசப் (ஜேர்மனி), அலெக்ஸ் லம்பேட் (ஜேர்மனி), அன்ரன்மெல் (ஜேர்மனி), லிப்டன் (லண்டன்), கட்சன் (ஜேர்மனி) டெக்ஸ்டர் எமிலி அகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 21.08.2019 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27480)(14.17)

தகவல் :குடும்பத்தினர்.

**004917712709454/ 077 666 9055**

## பணியாளர்கள் தேவை

**வவுனியா, கண்டி வீதியில் இயங்கிவரும் (வைற் ஸ்ரோன் உணவகத்துக்கு) White Stone Rest** பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் உடன் தேவைப்படுகின்றார்கள்.

**பிரதான சமையல் நிபுணர் Main Chef Cook**
**(இந்தியா, சீனா, இலங்கை உணவு வகைகள்)**

- 3 வருட அனுபவத்துடன் கூடிய துறை பற்றிய கல்விச் சான்றிதழ் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.
- ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயது எல்லை - 25 - 45 வரை

**Note** :- துறைபற்றிய அனுபவம், சான்றிதழ்கள் என்பன வற்றுடன் தங்களுக்குரிய நேர்காணலினூடாக கலந்தாலோசித்த பின்னர் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

(AVA/364)(11.17

**077 313 6262**

## வெதுப்பகத்திற்கு பணியாளர்கள் தேவை

வவுனியா, பூந்தோட்டம் கைத்தொழில்பேட்டை பகுதியில் இயங்கி வரும் **சின்பொன் வெதுப்பகத்திற்கு** பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

**I. பேஸ்ரி நிபுணர் Pastry Chef :-**

- 3 வருட அனுபவத்துடன் இத்துறை பற்றிய கல்விச் சான்றிதழ் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயது எல்லை 25 - 45 வரை.

**II. FRESH CREAM CAKE MAKERS**

- 3 வருட அனுபவத்துடன் கூடிய துறை பற்றிய சான்றிதழ் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயது எல்லை 25 - 45 வரை

**III. வெதுப்பக உற்பத்தி வேலையாள்கள் (பெண்கள் மட்டும்)**

- அனுபவம், துறை பற்றிய அறிவு முக்கியமாக கருதப்படமாட்டாது.
- சம்பளத்துடன் (3மாத கால பயிற்சி வழங்கப்படும்)
- பயிற்சியின் பின்னர் வேலை நிரந்தரப்படுத்தப்படும்.
- வயது எல்லை 25 - 40 வரை

கல்வித்தகைமை துறை பற்றிய அனுபவம், சான்றிதழ்கள் என்பனவற்றுடன் தங்களுக்குரிய நேர்முகப்பரீட்சையில் கலந்தாலோசித்த பின்னர் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

(10473)(4.17)

**024 222 6797/077 720 6797**

## வேலையாள் தேவை

பல் கட்டும் அனுபவமுள்ளவர் தேவை.


தொடர்பு:- 021 222 3461, 077 604 2264

## விற்பனைக்கு

நன்கு தேர்வு செய்து பயிரிடப்பட்ட நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.
(தாய் மரங்களைப் பார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்)
விலை ரூபா 100/-

**077 330 1798**

## ES Printers



Rubber Stamp

450/=

021 492 7471, 021 492 7472
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் செல்லையா
### தவனேஸ்வரன் (தவனேஸ்)

(உரிமையாளர்: தபேசன் விவசாய மாளிகை, கோண்டாவில் சந்தி)



பிறப்பு 10.04.1955 — இறப்பு 20.07.2019

கடந்த (20.07.2019) அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லையா தவனேஸ்வரன் எம்மைப் பிரிந்தபோது அவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்கள், நேரடியாகவும் மலர்வளையங்கள் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்து எமது துயரில் பங்குப்பற்றியோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.08.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்

(IN.11021)13.17)

## அறிவித்தல்
### தேர்தல்கள் ஆணைக்குழு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் பயன்படுத்துவது 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு என்பதால் இந்த சனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கும் வாக்காளர்களுக்காகச் செய்யப்படுகின்ற அறிவித்தலாகும்.

- வாக்கெடுப்புக்கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருக்கும் அரச அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படை ஆகியவற்றின் அலுவலர்கள்.
- பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்கள்.
- இலங்கை புகையிரதத் திணைக்களம், தபாற் திணைக்களம், மின்சார சபை, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை...................... பிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- தேர்தல் தொடர்பான பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படவிருக்கும் அரச அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- தேர்தல் தொடர்பான பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படவிருக்கும் இலங்கை மத்தியவங்கியின் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.

தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாதுள்ள அல்லது முடியாமற் போகக் கூடிய சாத்தியமுள்ள அரச அலுவலர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்க முடியும்.

தேர்தலுக்கான திகதியொன்றைக் குறித்தபின்னர் அஞ்சல் மூல வாக்காளர்கள் தமது அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பப் படிவத்தினை எக்காரணங் கொண்டும் தாமதிக்காமல் பூர்த்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்களிலிருந்து நேரகாலத்துடன் பின்வரும் தகவல்களைப் பெற்று ஆயத்தப்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது. இதற்காக தற்போது கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளின் போது வாக்காளர் கணக்கெடுப்புப் படிவத்துடன் இணைத்து வழங்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் குறித்த தகவல்கள் அடங்கிய பற்றுச்சீட்டில் (சிறியதுண்டுப் பிரசுரத்தில்) காணப்படும் தகவல்களிலிருந்து அல்லது உங்களது கிராம அலுவலரிடம் அல்லது தமது வதிவிடத்திற்குரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| | |
|---|---|
| **தேருநர் இடாப்பு வருடம்** | - 2018 |
| **நிருவாக மாவட்டம்** | - |
| **வாக்கெடுப்புப் பிரிவின் பெயரும், எழுத்தும்** | - |
| **வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்** | - |
| **கிராம அலுவலர் பிரிவு** | - |
| **வீதியின் அல்லது கிராமத்தின் பெயர்** | - |
| **வாக்காளரின் முழுப்பெயர்** | - |
| **தனதுபெயருக்கு உரிய தொடரிலக்கம்** | - |
| **தேசிய அடையாளஅட்டை இலக்கம்** | - |

2019.08.19 ஆந் திகதி.

**மஹிந்ததேசப்பிரிய**
**தவிசாளர்**
**தேர்தல்கள் ஆணைக்குழு,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய**

(IN 11012)(4.17)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மோதகமும், கொழுக்கட்டையும்

தமிழர்கள் தொடர்பில் சிங்களவர்களின், சிங்களத் தலைவர்களின் நிலைப்பாடுகள் எப்போதும் ஒரே மாதிரியானவை. அதிலிருந்து அவர்கள் விலகப் போவதுமில்லை. மாறப் போவதுமில்லை. அதனைப் பல தடவைகளில் அவர்கள் நிரூபித்து வந்திருக்கின்றார்கள். சிங்களவர்கள் வெளித்தோற்றத்தால் தாம் வேறுபட்டவர்களாக வெளிக்காட்டிக் கொண்டாலும், அவர்களின் நிலைப்பாடுகள் எப்போதும் ஒரேமாதிரியானவைதான்.

ஐக்கிய தேசியக்கட்சிதலைமையிலானகூட்டணியின்அரசதலைவர்வேட்பாளராகக்களமிறங்கக்கூடும்என்று எதிர்பார்க்கப்படும் அமைச்சர் சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டையில் நடந்த நிகழ்வில், சிங்கள – பௌத்த கொள்கையுடனான ஆட்சியே நாட்டுக்குத் தற்போது தேவைப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார்.

மறுபுறம்சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பவர் கோத்தபாய ராஜபக்ச. அவர் எப்படிப்பட்டவர்? எந்தக் கொள்கையுடையவர் என்று தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். கடந்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின்செயலராக இருந்து என்னசெய்தார்? என்பதை தமிழ் மக்கள் முழுமையாக அறிவார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தங்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர் கோத்தபாயதான் என்று, முஸ்லிம்கள் இன்றும் நம்புகின்றார்கள்.

கோத்தபாயவின் சிந்தனை செயல் எல்லாமே, இது சிங்கள– பௌத்த நாடு. இங்கு சிங்களவர்களுக்கு மாத்திரமே உரித்து உண்டு. தமிழர்கள், சிங்களவர்களின் அடிமைகளாக இந்த நாட்டில் இருந்து விட்டுப்போகலாம். அதனைச்செயலுருவில்செயற்படுத்தியும் காட்டினார்.

மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியோ, தமிழர்களை அரவணைக்கும் கட்சி போன்று தன்னைக் காட்டிக் கொள்கின்றது. ஆரம்பத்திலிருந்தே இத்தகைய சிங்கள – பௌத்த கொள்கைகளுக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் போன்று அவர்கள் தங்களை வெளிக்காட்டியதில்லை. ஆனால், கோத்தபாயவும், மகிந்தவும் கடந்தகாலங்களில்என்னசெய்தார்களோ, அதைநல்லாட்சிஎன்ற பெயரில் ஆட்சிப் பீடமேறிய ரணிலும் செய்தார். மகிந்தவும், கோத்தாவும் நேரடியாகச்செய்தார்கள்என்றால், ரணில்அதனைச் சூட்சுமாகச் செய்து கொண்டிருக்கின்றார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு சமதையான அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச என்றே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும்பகிரங்கமாகக்கூறிவருகின்றனர். அதைநிரூபிக்கும் வகையில் சஜித்தும் செயற்பட்டு வருகின்றார்.

இந்தநாட்டில்புரையோடியிருக்கும், தீராத இனப்பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியே சிங்கள –பௌத்த சிந்தனைதான். அந்தச் சிந்தனையிலிருந்துசிங்களத்தலைவர்கள்வெளிவராதவரையில், அதைத்தாண்டி அவர்கள்சிந்திக்காதவரையில் இந்தப்பிரச்சினை தீரவே தீராது.

அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படும் சஜித் பிரேமதாசவும், இந்த சிங்கள – பௌத்த சிந்தனைக்குள்ளேயே இருக்கப் போகின்றார். சிங்கள மக்களின் வாக்குகளைக் கவருவதற்கு அவருடைய தெரிவாகவும் சிங்கள –பௌத்த கோசமே இருக்கப் போகின்றது. அவருடைய பேச்சு அதனைத் தெளிவாகவே எடுத்துக்காட்டுகின்றது.

ஆக மொத்தத்தில் எல்லாச் சிங்களத் தலைவர்களும் தங்களது நிலைப்பாட்டிலிருந்து மாறப் போவதில்லை. சஜித் மோதகம் என்றால்கோத்தபாய கொழுக்கட்டைதான். பார்வைக்கு வேறாக இருந்தாலும் அதன் உள்ளீடுகள் எல்லாம் ஒன்றுதான்.

தமிழர்களும், தமிழ் தலைவர்களும் தெற்குத் தலைவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சாணக்கியமான முடிவை எடுக்கவேண்டும். இப்போதே வெளித் தெரியும் சிங்களத் தலைவர்களின் சுயரூபம் தேர்தலின் பின்னர் விஸ்வரூபம் எடுக்கும். அதனை உணர்ந்து நடைபெறப் போகும் அரசதலைவர் தேர்தலை தமிழர்கள் அணுகுவதே சிறப்பானது.



# பொருத்தமானவரை தெரிவது மக்களின் தலையாய கடமை!



மகிந்த அணியைப் பொறுத்த வரையில் சகல முடிவுகளையும் மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் மகிந்தவிடமே உள்ளது. இதை மீறுவதற்கு அங்கு எவருக்குமே துணிவு இல்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. ரணிலை எதிர்க்கின்றவர்களும் அந்தக் கட்சிக்குள் உள்ளனர். தலைமைப் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கான முயற்சிகளும் அங்கு இடம்பெற்றிருக்கின்றன. உண்மையைக் கூறினால் கட்சித் தலைவர் என்ற வகையில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய சகல உரிமைகளும் அவருக்கு உள்ளது. ஆனால் அவரால் அவ்வாறு நடந்துகொள்ள முடியவில்லை.



■ சேரலாதன்

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டுமென்றால், கோத்தபாயவிடம் ஆட்சியை ஒப்படைப்பதே பொருத்தமானது என்ற வகையில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. மகிந்த தரப்பினர் மட்டுமல்லாது மல்வத்தைபீட மகாநாயக்கரும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். தற்போது கோத்தாவின் பரம எதிரியெனக் கருதப்பட்ட சரத்பொன்சேகாகூட கோத்தபாய வேட்பாளராக நியமிக்கப்பட்டதை நியாயப்படுத்தியிருக்கிறார்.

ஒருநாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவதை எவருமே குறைகூறமுடியாது. நாட்டு மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்றால் பாதுகாப்பானதொரு சூழலை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். பாதுகாப்பில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று, நாட்டில் மிகப்பெரிய அசம்பாவிதம் நிகழ்ந்தது. அரச உயர்பீடத்தில் இருந்து கீழ்மட்டம்வரை பாதுகாப்புத் தொடர்பாகக் காட்டப்பட்ட அலட்சியமே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

ஆனால் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய ஒருவரால்தான் முடியுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

### வாய்ப்பு இருந்திருந்தால் மகிந்ததான் வேட்பாளர்

மூன்றாவது தடவையும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்சவுக்கு வாய்ப்பு இருந்திருக்குமானால் கோத்தபாயவின் பெயர் மகிந்த தரப்பினால் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவேமாட்டாது. மகிந்தவுக்கு வாய்ப்புக் கிடைக்காத ஒரே காரணத்துக்காகவே கோத்தபாய மகிந்த தரப்பின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சி அரச தலைவர் தேர்தலுக்கான வேட்பாளரை அறிவிப்பதில் தடுமாறிக்கொண்டிருக்கின்றது. சஜித் பிரேமதாசவுக்கு இந்த வாய்ப்புக்கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அது இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை. அதிலும் ஏதோ சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வேட்பாளர் தொடர்பான உறுதியான முடிவு இதுவரையில் மேற்கொள்ளப்படாமையே இதற்கான காரணமாகும்.

### பொதுமக்கள் முன்னணியின் ஒற்றைத் தலைமை மகிந்த

மகிந்த அணியைப் பொறுத்த வரையில் சகல முடிவுகளையும் மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் மகிந்தவிடமே உள்ளது. இதை மீறுவதற்கு அங்கு எவருக்குமே துணிவு இல்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. ரணிலைஎதிர்க்கின்றவர்களும் அந்தக் கட்சிக்குள் உள்ளனர். தலைமைப் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கான முயற்சிகளும் அங்கு இடம்பெற்றிருக்கின்றன. உண்மையைக் கூறினால் கட்சித் தலைவர் என்ற வகையில் அரச தலைவர்தேர்தலில் போட்டியிடுவதற்குரிய சகல உரிமைகளும் அவருக்கு உள்ளது. ஆனால், அவரால் அவ்வாறுநடந்துகொள்ள முடியவில்லை.

இறுதிப்போர் இடம்பெற்றபோது எவர் ஆட்சியில் இருந்தாலும் போரில் வெற்றிபெற்றிருக்க முடியும். ஏனென்றால் பயங்கரவாதம் என்ற போர்வையின் கீழ் வல்லமை படைத்த பல நாடுகள் ஒன்றிணைந்து புலிகளைத் தோற்கடித்ததை மறுத்துக் கூறமுடியாது. ஆகவே மகிந்த, கோத்தா, பொன்சேகா ஆகியோர் போர் வெற்றிக்குத் தாமே காரணமெனக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல.

மேலும் கோத்தபாயவை முன்னிலைப்படுத்துவதற்காக பாதுகாப்பை கையில் தூக்கிப் பிடிப்பதும் சரியானதாகத் தெரியவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக இந்த நாடு பாதுகாப்பாகத்தான் இருந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களை மட்டுமே வைத்துக்கொண்டு நாடு பாதுகாப்பான நிலையில் இல்லையெனக் கூறிவிடமுடியாது.

இன்றுள்ள சூழ்நிலையில் சகல இனத்தவர்களையும் பாரபட்சமின்றி அணைத்துச்செல்லக்கூடிய ஒருவரே அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். இதற்குப் பெரும்பான்மை மக்களிடத்தில் மனமாற்றம் வேண்டும். ஆனால் சில அரசியல்வாதிகள் அவர்களின் மனங்களில் இனவாதத்தையும் இனக்குரோதத்தையும் விதைப்பதிலேயே குறியாகக்கொண்டு செயற்படுகின்றனர். இத்தகையவர்கள் மனம் திருந்தாத வரையிலும் நாட்டில் இன நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

நாட்டின் பாதுகாப்புத் தவிர, ஏனைய சகல விடயங்களையும் திறம்படக்கையாளக் கூடிய ஒருவரைத் தேடுவதென்பது இந்த நாட்டைப் பொறுத்த வரையில் இலகுவான காரியமல்ல. ஆனால் தேடித்தான் ஆகவேண்டும். ■

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
# செய்திகள்

09

திங்கட்கிழமை 19 ஒகஸ்ட் 2019

# தமிழருக்கான தீர்வு தொடர்பில் சிங்கள மக்களுக்கு கூறட்டும்

## ரணிலின் கருத்துக்கு சீ.வி.கே. பதில்

யாழ்ப்பாணம், ஓக. 19

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் முதலில் சிங்கள மக்களிடம் ரணில் வெளிப்படையாகக் கூறட்டும். இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத் தளபதியாக மகேஸ் சேனநாயக்க நியமிக்கப்படுவதற்கு முன்னர், யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்தார். இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்த காணிகளை விடுவிப்பதற்கு அவர் சாதகமான நிலைப்பாடுகளை எடுத்தார். ஆனால் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் சவேந்திர சில்வா மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் உள்ளவரை நியமிப்பது. நல்லாட்சி கோட்பாட்டுக்கு எதிரானது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சர்கள் வடக்குக்கு அண்மையில் வந்து சென்றிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் தமக்குத்தான் ஆதரவு என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இங்கு எவருடன் கதைத்து அப்படி முடிவை எடுத்தார்களோ தெரியாது. எங்களுக்கான தலைமையை நாங்கள் தீர்மானிப்போம்.

வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

இந்த விடயத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுட்டிக்காட்டியபோது அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. ஆகக் குறைந்தது அதனைக் கவனிக்கின்றேன் என்று கூடக் கூறவில்லை. இந்த விவகாரத்தில் அரசு உடந்தையாக இருக்கின்றது.

வடக்கு இளையோருக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்பு இது. இதற்கு முடிவு கட்டாமல் அரசு விட்டால், நாம் வேறொரு முடிவை எடுக்கத் தள்ளப்படுவோம்.

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் குருநகரில் ரணில் கூறியிருந்தார். இதனை அவர் முதலில் வெளிப்படையாக சிங்கள மக்களுக்கு முதலில் கூறட்டும் - என்றார். (ஓ.5,7)

# தேர்தல் அறிக்கைகளின் அடிப்படையில் ஆதரிப்போம்

## ரெலோவின் நிலைப்பாடு

வவுனியா, ஓக. 19

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் நாம் ஆதரவு வழங்குவோம் என்று ரெலோ அறிவித்துள்ளது.

வவுனியாவில் அந்தக் கட்சியின் தலைமைக்குழுக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு அந்தக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் நாம் 5 மணி நேரம் வரையில் கலந்துரையாடியுள்ளோம். இந்த நாட்டில் அரச தலைவர் தேர்தல்கள் 7 நடந்து முடிந்துள்ளன. தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கவில்லை.

எதுஎவ்வாறு இருந்தாலும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுக்கு ஏதாவது கிடைக்குமா என்ற நிலையில் இந்தத் தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் இந்த மாத இறுதிக்குள் மையக் குழு மற்றும் ஏனைய உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கும். பிரதான கட்சிகள் இரண்டு தான் வேட்பாளர்களை அறிவித்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் அவர்களுடைய தேர்தல் அறிக்கையை பொறுத்துதான் எங்களுடைய தீர்மானத்தை இந்த நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக தெரிவிக்க இருக்கின்றோம்.

இதேவேளை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை மூன்று கட்சிகள் இருக்கின்றன.

அதில் ஒரு கட்சி எங்களுடையது. நாங்கள் எடுக்கின்ற தீர்மானத்தை ஏனைய இரு கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒரு இறுதி தீர்மானத்துக்கு வருவோம். நாங்கள் எடுக்கின்ற தீர்மானத்துக்கு அவர்கள் சாதகமாக இருக்கப் போகின்றார்களா அல்லது எதிராக இருக்க போகின்றார்களா என்பதைக் காலம் தான் பதில் சொல்லும் - என்றார். (ஓ.5,110)

# எழுக தமிழ் பேரணியால் எந்த மாற்றமும் வராது

## விக்கியைப் போட்டுத் தாக்குகிறார் சங்கரி

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண சபையில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோதே முதலமைச்சர் பதவியில் இருந்து விக்னேஸ்வரன் ஒதுங்கியிருக்கவேண்டும். அதனை விடுத்து எழுக தமிழ் பேரணிகளை நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் வீதியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது அதில் அங்கம் வகித்த அமைச்சர்கள் சிலர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டன. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த நிர்வாகத்திலேயே இந்தக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. முதலில் அவர் தனது பதவியில் இருந்து விலகி, நீதியான விசாரணைக்கு இடமளித்திருக்க வேண்டும். விசாரணைக்கு பதவியில் இருந்து ஒதுங்கி ஒத்துழைப்பு வழங்கி இருந்தால் மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருப்பார். வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் செய்த தவறால் இப்போது நீதிமன்றத்தின் ஊடாக அவரது நிர்வாகப் பிழைகள் வெளியில் வந்துள்ளன. இவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டு தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க போகின்றோம் என்று எழுக தமிழ் பேரணிகளை நடத்துவதால் எந்த பயனும் கிடைக்கப் போவதில்லை. இவர்களின் பேரணியால் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கட்சி ஆரம்பிக்கும்போது ஒரு பேரணி. இன்று கட்சி ஆரம்பித்த பிறகு அதே பேரணி மீண்டும் நடக்கவுள்ளது. இதில் ஒன்றும் மக்கள் நலன் இருக்கப் போவதில்லை.

**முட்டாள்தனமானது**

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று எழுத்துமூலமான உறுதிமொழியை வழங்கினால் ஆதரவு கொடுக்கலாம் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று நினைப்பது முட்டாள்தனமானது.

நாட்டில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்ற விவாதம் தேவை இல்லை. ஏனெனில் கடந்த காலங்களில் நடைபெற்ற அனுபவங்களை மையாக வைத்து தமிழ் மக்கள் தெளிவான முடிவெடுக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்னிப் போரில் ஏராளமான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அந்தப் போரை முன்னின்று நடத்திய அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கடந்த தேர்தலில் ஆதரவு வழங்கியமையை தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டாட்சித் தீர்வு தருவார் என கூட்டமைப்பினர் கூறித் திரிகின்றனர். இதனையும் முட்டாள்தனம் என்பதா? அல்லது என்னவென்று கூறுவது? என்று தெரியவில்லை. ஏனெனில் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்டபோது. நாடாளுமன்றில் அதனை தீயிட்டுக் கொளுத்தியவர்களே இவர்கள்தான். ரணிலின் நரித்தனம் இப்போது அரசியலுக்கு வந்துள்ள கூட்டமைப்பின் பேச்சாளருக்குப் புரியாது.

நான் 40 வருடங்களுக்கு மேலாக அரசியலில் இருக்கின்றேன். நான் அரசியலில் ஈடுபட்ட காலத்தில் சுமந்திரன் பிறந்தே இருக்கமாட்டார். ஆனால் நாம் ரணிலின் நரித்தனத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே அறிந்து வைத்திருக்கின்றோம். இவ்வாறான தென்னிலங்கை கட்சிகளின் குணங்கள் இருக்கும் போது நாம் நிதானித்துச் சரியான தெரிவுகளை முன்னெடுக்க வேண்டும். எமது பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என்று எழுத்தில் தந்தால் ஆதரவு கொடுக்கலாம் என்று நினைப்பதும் அடி முட்டாள் தனம் என்றே கூறவேண்டும். (ஓ.5,7,105)

# உலக சைவ திருச்சபையின் மாதோட்டக்கிளை

உலக சைவத் திருச்சபையின் மாதோட்டக்கிளை ஆரம்பநிகழ்வு நேற்று மு.ப 10 மணியளவில் திருக்கேதீச்சரம் அம்மை -அப்பன் அரங்கில் நடைபெற்றது.

இதில் உலக சைவத்திருச்சபையின் தலைவர் புலோலியூர் அடியார் விபுலானந்தா, உலக சைவத் திருச்சபையின் பாரதத்தின் அமைப்பாளர் மற்றும் தமிழ்நாடு ரோட்டரி கழக தலைவருமான ஜெயகாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-213)



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு பேருவளையில் நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் மக்களால் வரவேற்பளிக்கப்பட்டது. கெச்சிமலை பள்ளிவாசலுக்குச் சென்ற கோத்தபாய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் அங்கு ஆசி பெற்றனர். (ஓ.5)

# சட்டவிரோத மீன்பிடியில் வெளிமாவட்ட மீனவர்கள்

## பிடிக்கச் சென்றபோது தப்பியோடினர்

யாழ்ப்பாணம், ஓக. 19

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று மதியம் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட வெளிமாவட்ட மீனவர்களைப் பிடிப்பதற்காக, உள்ளூர் மீனவர்கள் விரட்டிச் சென்றபோது அவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். ஒருவர் மாத்திரமே பிடிபட்டுள்ளார். அவரை கடுமையாக எச்சரித்து விடுவித்துள்ளனர்.

கடலட்டை பிடிப்பதற்கு வெளிமாவட்ட மீனவர்களுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக கடற்கரையிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்று மட்டுமே கடலட்டை பிடிப்பில் ஈடுபட முடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளிமாவட்ட மீனவர்கள் கடற்கரையிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர் என்று உள்ளூர் மீனவர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

கடலட்டை பிடிப்பில் ஈடுபடுபவர்கள் வலுக்கூடிய படகுகளைப் பயன்படுத்துகின்றனர். அந்தப் படகுகள் உள்ளூர் மீனவர்களின் வலைகளை அறுக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கடலட்டை பிடிப்பதற்கு சுழி ஓடிச் செல்பவர்கள், உள்ளூர் மீனவர்களின் வலைகளை அறுக்கின்றனர். இதனால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மதியம் கடற்கரையிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்ட மீனவர்களை உள்ளூர் மீனவர்கள் இனங்கண்டுள்ளனர். சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் அவர்களைப் பிடிப்பதற்காக உள்ளூர் மீனவர்கள் விரட்டிச் சென்றுள்ளனர். அவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். ஒருவர் மாத்திரமே பிடிபட்டுள்ளார். அவர் கடுமையான எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஓ.5,7,26)

# பொலிஸாரும், பாதுகாப்புத்துறையும் சுயாதீனமாக இயங்குதல் வேண்டும்

## கொழும்புப் பேராயர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் துறையினர் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் தேவைகளுக்கு அடிபணியாது சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.



குற்றப்புலனாய்வுபிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடியின் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் துறையினர் எந்த வித பயமும் இன்றித் தைரியமாக தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

தற்போது சில பொலிஸ் அதிகாரிகள் அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப செயற்படுகிறார்கள். அவ்வாறு அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக உண்மைகளை வெளிப்படுத்தாதுவிட்டால் பொலிஸ் சேவையின் தனித்துவம் மற்றும் முக்கியத்துவம் இல்லாமற் போய்விடும்.

பொது மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சந்தேகம், அச்சம் என்பவற்றை இல்லாமல் செய்து, நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பொலிஸ் அதிகாரிகளுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசியல் அழுத்தங்களுக்கு தலைசாய்க்காது பொலிஸ் அதிகாரிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் தமது கடமையை முறையாக முன்னெடுக்க வேண்டும். எந்தவிதப் பயமும் இன்றி மக்களுக்காக தைரியமாகச் சேவை செய்ய வேண்டும்.

தற்போது மக்களிடையே மதங்கள் மீதான நாட்டம் குறைவடைந்துள்ளது. மதத் தலைவர்கள் முன்னுதாரணமாகச் செயற்படுகின்றமையும் குறைவடைந் துள்ளது. அனைவரும் பணம் மற்றும் அரசியல் இலாபத்துக்காகச் சுயநலமாகச் செயற்படுகின்றார்கள். இவ்வாறு செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)

# எம்.பியாக நியமிப்பதில் கட்சிக்குள் இழுபறிப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 19

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சாலிந்த திசநாயக்காவின் இடத்துக்கு புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் சட்ட நெருக்கடி நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்படு கின்றது.

குருநாகல் மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அவரின் இடத்துக்குப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிப்பதற்கான சட்ட ஒழுங்காக அந்தக் கட்சி சார்பில் போட்டியிட்டு தேர்வாகாத வேட்பாளர்களில் அடுத்த நிலையில் உள்ள அதிகூடிய வாக்கைப் பெற்றவரின் பெயரை அரசிதழில் பிரசுரிக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் பிரகாரம் குறித்த கட்சியில் அடுத்த நிலையில் இருந்த உறுப்பினர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசியாக இருந்தார். அதனால் அந்தக் கட்சிக்குக் கிடைத்த நியமன ஆசனத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பரிந்துரைக்கப்பட்டு அங்கம் வகித்தார். இவருக்கு அடுத்தவர் மகிந்த அணியின் விசுவாசி என்பதால் குறித்த ஆசனம் மகிந்த அணியின் கைக்குச் செல்வதைத் தடுப்பதற்காக புதிய உத்தி கையாளப்பட்டது.

அதாவது தற்போது நியமன ஆசனத்தில் தேர்வான நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பதவியைத் துறப்பதன் மூலமாக மீண்டும் பட்டியலில் அடுத்த நிலை என்றவகையில் நாடாளுமன்றத்துக்குள் நுழையும் அதேநேரம், வெற்றிடமாகும் வெகுமதி ஆசனத்துக்கும் மைத்திரியின் ஓர் விசுவாசியை நாடாளுமன்றத்துக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டு பெயரும் பரிந்துரைக்கப்பட்டது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சாலிந்த திசநாயக்கா உயிரிழந்துவிட்டார் என்பதால், நியமனப் பட்டியலில் வெற்றிடமாக அடுத்த நிலையில் இருந்தவர் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் அவரை முன்மொழிய முடியாது என்கின்ற சட்டச் சிக்கல் முன் வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனாலேயே குறித்த விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)



# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சு செயலருக்கு மனு



யாழ்ப்பாணம்,ஓக.19

"நிலைமாறு கால நீதிக்காய் எங்களின் குரல்கள்" எனும் தொனிப்பொருளில் பாதிக்கப்பட்ட பெண்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள லக்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீள் குடியேற்ற அமைச்சின் செயலர் சிவஞானசோதி கலந்து கொண்டார். அவரிடம் போர் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மனு ஒன்று கையளிக்கப்பட்டது. குறித்த மனுவை விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் செயற்றிட்ட அலுவலர் சி.கோமதி, அமைச்சின் செயலரிடம் கையளித்தார்.

குறித்த மனுவில் காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், மாற்றுத்திறனாளிகள் பிரச்சினை, முன்னாள் போராளிகளின் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இனியும் காலம் தாமதிக்காது சம்பந்தப்பட்டவர்கள் விரைந்துநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண பெண்கள் சமாச பிரதிநிதிகள், மாவட்ட சமாச உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்கள், மாதர் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-ரி1)



# யானையின் சடலம் மீட்பு

வவுனியா,ஓக.19

காட்டிலிருந்து யானையின் சடலம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊஞ்சல் கட்டி பகுதியில் உள்ள காட்டில் இருந்தே குறித்த யானையின் சடலம் அண்மையில் மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் யானையின் சடலம் ஒன்று இருப்பதாக புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே சடலம் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட யானை இரண்டு நாள்களுக்கு முன்பாகவே இறந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், வனஉயிரியல் திணைக்களத்துக்கு தகவலை தெரிவித்துள்ளனர். (ஜ-110)

# தென்மராட்சிப் பிரதேச மாமரச் செய்கையாளர்கள் தம்புள்ளைக்குச் சென்றனர்

சாவகச்சேரி,ஓக.19

தென்மராட்சிப் பிரதேச மாம்பழச் சங்கங்களைச் சேர்ந்த மாமரச் செய்கையாளர்கள் தம்புள்ள நகரில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மீசாலை, எழுதுமட்டுவாழ், கெற்பேலி, வெள்ளாம்போக்கட்டி ஆகிய நான்கு மாம்பழச் சங்கங்களைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்ட செய்கையாளர்கள் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாயப் போதனாசிரியர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நடைபெறும் பழ வியாபாரம் மற்றும் சந்தை நடைமுறைகள் தொடர்பாகப் பொருளாதார மத்திய நிலையத்தில் பணிபுரியும் விவசாய போதனாசிரியர் அமிலவால் படக் காட்சி மூலம் விளக்கமளிக்கப்பட்டது. (ஜ-131)





# தவறான முடிவெடுத்து மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

கொழும்பு,ஓக.19

மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


இந்தச் சம்பவம் கம்பகா நிட்டம்புவ காஹடவோவிடப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

காஹடவோவிட குருவலான பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நவாஸ் அப்துல் ஹைஷ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து . மண்ணெண்ணெய் போத்தல் ஒன்றையும், லைட்டர் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் மீன் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். இவருக்குக் கடன் சம்பந்தமான பிரச்சினைகள் இருந்துள்ளன.

இதன்காரணமாக இவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் . சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ71, 22)





# 'றணம்' குறும்படம் வெளியீடு

முல்லைத்தீவு,ஓக.19

அண்மைக்காலமாக பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்து வரும் "நுண் கடன்" சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தும் பிரச்சினைகளைக் கூறும் 'றணம்' என்ற குறும்படம் வெளியிடப்பட்டது.

முல்லைத்தீவு ஆறுமுகத்தான் குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை குறும்பட இயக்குநர் வல்லிபுரம் பிரகலாதன் தலைமையில் குறும்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

விருந்தினர் வரவேற்புடன் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து 'றணம்' குறும்படம் வெளியிடப்பட்டது. குறும்படத்தின் முதல் இறுவட்டை வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன், இயக்குநர் பிரகலாதனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து விருந்தினர்களது உரைகள், இயக்குநர் உரை மற்றும் படக்குழுவினரது அறிமுகம் என்பன இடம்பெற்றன.

மேலும் நிகழ்வில் விருந்தினர்களாக கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், குமுழமுனை கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் இ.மயூரன், ஆறுமுகத்தான் குளம் கிராம அலுவலர் ப.தர்சன், சமூக ஆர்வலர் ரமேஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-222)

# குறுக்கு வழியில் ஆட்சியை பிடிக்க முயன்றது ஐ.தே.க.!

*சாடுகின்றது பொதுமக்கள் முன்னணி*

கொழும்பு, ஓக.19

குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து முயற்சித்ததன் விளைவே இன்று கட்சி உட்பட நாட்டுக்கும் பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. கட்சியின் தலைமைத்துவத்தை தன் வசமாக்கிக் கொண்டு அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளரை களமிறக்கும் நிலைப்பாட்டிலே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார்.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள்முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் கடந்தவெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த இரண்டு தசாப்த காலமாக நாட்டு மக்களிடம் இருந்து நேரடியாக ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. தம்மை நாட்டு மக்கள் வாக்குகளால் நிராகரிப்பார்கள் என்று அறிந்து குறுக்கு வழியின் ஊடாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளையே ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ளது. தவறான தீர்மானங்கள் கட்சியையும் பலவீனப்படுத்தியது. அதன் விளைவு அனைத்தும் அரசியல் செயலொழுங்கையும் பாதித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க பிறிதொருவருக்கு ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டார். இதன் காரணமாகவே தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. கட்சியின் தலைமைத்துவத்தைத் தம் வசப்படுத்திக் கொள்வதற்காக இந்த முறையும் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி அவர் ஊடாகத் தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்ளவே அரச தலைவர் முயற்சிப்பார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரை பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நிச்சயம் ஆட்சிமாற்றம் இடம்பெறும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பலமான ஒரு கூட்டணியை அமைக்க வேண்டுமாயின் ஆளும் தரப்பினருக்கு எதிராகச் செயற்படும் அனைத்து தரப்பினரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைய வேண்டும் -என்றார். (எ)



# அருவக்காட்டில் குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, ஓக.19

கொழும்புக் குப்பைகளை புத்தளம் அருவக்காட்டில் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

புத்தளம் - மன்னார் முதன்மை வீதியிலுள்ள பெரிய பள்ளிவாசலுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மதத் தலைவர்கள், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக சனத் நிஷாந்த பெரேரா, அர்ந்திக்க பெர்னாந்து, பியந்த பெர்னாந்து, புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளீன் புத்தளம் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அரசுக்கு எதிராக பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டதுடன் பல்வேறு பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (எ)



சாவகச்சேரி மருத்துவமனையின் குருதி சுத்திகரிப்பு நிலைய ஓராண்டு நிறைவு தின நிகழ்வும் 500ஆவது நோயாளருக்கான குருதி சுத்திகரிப்பும் அண்மையில் இடம்பெற்றன. (ம-9)

*முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும்*

# மீனவர் பிரச்சினைகளை வெளிக்கொணர சந்திப்பு

*தென்பகுதி மீனவ அமைப்புக்களும் பங்கேற்றன*

முல்லைத்தீவு, ஓக. 19

முல்லைத்தீவில் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக மீனவர்களின் பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளது. இது தற்போது இன்னும் அதிகரித்துச் செல்கின்றது. இதனை வெளிக்கொண்டுவரும் செயற்பாடாக தென்பகுதி மீனவர்களுடனான சந்திப்பு அமைந்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அன்ரனி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னிலங்கை மீனவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக தெற்கைச் சேர்ந்த மீனவ அமைப்புக்களும் ஊடகவியலாளர்களும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

முல்லைத்தீவில்,முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசத் தலைவர் அன்ரனி தலைமையில் இது நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துளைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தலைமையில் கலந்துகொண்டிருந்தனர்.

தென் இலங்கை மீனவர்கள் வடக்கு மாகாணத்தின் கடற்பரப்புக்களில் தடைசெய்யப்பட்ட மீன்பிடிமுறைகளுடன் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமானவர்கள் வந்து நின்று சட்ட விரோதமான மீன்பிடிமுறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எடுத்துரைத்தனர்.

இதில் உழவு இயந்திரம் மூலமாக கரைவலை இழுத்தல் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணக் கடலில் அட்டைபிடிக்க வருபவர்களால் சுண்டிக்குளம் தொடக்கம் கற்கோவளம் வரையான கடற்கரையோரங்களில் கரைவலை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.



கொக்கிளாய், புல்மோட்டைப் பகுதிகளில் தெற்கைச் சேர்ந்த மீனவர்களின் அதிகரிப்பு, கடலில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்கு வலை மற்றும் வெடிவைத்து மீன்பிடிக்கும் நடவடிக்கைகளில் தென்பகுதி மீனவர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

தென்பகுதி மீனவ சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தென்பகுதி ஊடகவியலாளர்களும் வந்துள்ளார்கள். இதன்மூலம் வடக்கில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் தெற்கில் ஊடகங்கள் ஊடாக தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கவுள்ளோம் என்று தென்பகுதியிலிருந்து வந்திருந்திருந்த சிலர் தெரிவித்தனர்.

பருவகால மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சீனை தொடர்பில் அனைத்து சமூகத்துக்கும் வெளிப்படுத்தும் செயற்பாடாக இது அமைந்துள்ளது என்று தெரிவித்த அன்ரனி, வடக்கில் மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இதுவரை எந்த அரசியல்வாதியும் அல்லது எந்தவோர் அமைச்சும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார். (து-ரி3)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி ஓக.19

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி இல்லத்தில் அண்மையில் நடைபெற்றன.

சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விருந்தினர்களாக பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வை. இராசரத்தினம், பிரிவு கிராம அலுவலர் க.சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவர் திருமதி பி.புஷ்பராணி, உப தலைவர் திருமதி செ.தங்கமணி, செயலர் திருமதி ம.கீர்த்திநாதன், உதவிச் செயலர் கு.நிவேதா, பொருளாளர் திருமதி ம.சரஸ்வதி ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-9)

## வேட்பாளர் அறிவித்த பின்னரே ஆதரவு தொடர்பாக பரிசீலனை

*சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.19

அனைத்துக் கட்சிகளும் தமது அரச தலைவர் வேட்பாளரை அறிவித்த பின்னரே எவருக்கு ஆதரவு என்பதைப் பகிரங்கப்படுத்த முடியும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரதும் கொள்கைகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆராய வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தமது அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவைப் பெயரிட்டுள்ளது.

தமது வேட்பாளராக எவரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதையடுத்து, ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கவுள்ள கூட்டணியின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் அதே தினத்திலேயே அரச தலைவர் வேட்பாளரும் தீர்மானிக்கப்படுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் ஹாசீம் தெரித்துள்ளார்.

இந்தநிலையில் சிறுபான்மையினக் கட்சிகள் எவருக்கு ஆதரவு வழங்கும் என்ற விடயம் முக்கியமானதாகப் பார்க்கப்பட்டு வருகின்றது. அனைத்துக் கட்சிகளும் தமது அரச தலைவர் வேட்பாளர்களை அறிவித்த பின்னர், அவர்களின் கொள்கை மற்றும் தேர்தல் அறிக்கை உள்ளிட்டவற்றைக் கருத்தில்கொண்டு எவருக்கு ஆதரவு வழங்குவதென்பதைத் தீர்மானிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஒத்த கருத்தையே வெளியிட்டிருக்கிறது. (எ)

## அழித்து விடலாமென்று சிலர் நினைக்கின்றனர்

*கூறுகிறார் பிரபா கணேசன்*

வவுனியா, ஓக. 19

வவுனியா தலைமைக் காரியாலய வழிகாட்டிப் பெயர்ப் பலகையைத் தகர்ப்பதன் மூலமாக என்னை அழித்து விடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் வவுனியா நகரசபை அனுமதியுடன் பொருத்தப்பட்டிருந்த வழிகாட்டிப் பெயர்ப் பலகை, சில விசமிகளால் நேற்றுமுன்தினமிரவு சேதமாக்கப்பட்டிருந்தது. இது பற்றி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார். (து-ரி4)

# வண்டுத் தாக்கத்தால் தென்னைகள் அழிவு

## வவுனியா விவசாயிகள் கவலை

*வவுனியா, ஓக. 19*

**வவுனியா மாவட்டத்தில் தென்னை மரங்களில் வண்டுத்தாக்கம் சமீப காலமாக அதிகரித்து வருகின்றது. இதனால் தென்னை மரங்கள் அழிந்து வருகின்றன என்று தென்னைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இனந்தெரியாத வண்டுகள் இளம் தென்னங்கன்றுகளை தாக்குவதால் அவை முறிந்து வீழ்ந்தும், ஓலைப்பகுதி கருகியும் அழிந்து வருகின்றன. குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் ஒலுமடு, மருதோடை, மாமடு கிராமங்களில் மக்கள் மீள்குடியேறிய பின்னர் தமது வாழ்வாதாரத்துக்காகச் செய்கை பண்ணிய தென்னங்கன்றுகள் அதிகளவில் மேற்குறித்த வண்டுத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன. இதன் காரணமாக தென்னைச்செய்கையைகைவிடும்நிலைக்கு தாம் சென்றுள்ளதாகக் குறிப்பிடும் தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள், இதுதொடர்பில்குறித்ததிணைக்களத்தினர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு வண்டுத்தாக்கத்தில் இருந்து தமது மரங்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத் துள்ளனர். (ம-110)

## மிகுதி பணத்துக்கு இனிப்பு வழங்கினால் வர்த்தக சங்கத்திடம் உடன் முறையிடுக!

*வவு. வர்த்தக சங்கத்தினர் அதிரடி அறிவிப்பு*

வவுனியா, ஓக. 19

வவுனியாவில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது மிகுதி சில்லறைப் பணத்துக்குப் பதிலாக இனிப்புக்கள் வழங்கப்படுகின்றன என்று எழுந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து, இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் வவுனியா வர்த்தகச் சங்கத்திடம் முறையிடும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் மிகுதி சில்லறைப் பணத்துக்கு இனிப்புகள் வழங்கப்படுகின்றன என்று செய்திகள் வெளியாகியிருந்தன. வர்த்தக நிலையங்களில் சில்லறைப் பணத்துக்குப் பெரிய தட்டுப்பாடு நிலவி வருவதன் காரணமாகவே மிகுதிச் சில்லறைப் பணத்துக்குப் பதிலாக இனிப்புகளை வழங்குவதாக வர்த்தகர்கள் தெரிவித்திருந்தனர். இதையடுத்தே வர்த்தகச் சங்கம் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளது.

அரச மற்றும் தனியார் வங்கி முகாமையாளர்களுடன் வர்த்தகச் சங்கத்தினர் கலந்துரையாடி சில்லறை பணத்தைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சில்லறைப் பணம் தேவைப்படும் வர்த்தகர்கள் வர்த்தகச் சங்கத்தின் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் வர்த்தகச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)



## வதிவிடப் பயிற்சிநெறி

வவுனியா, ஓக. 19

'ரான்ஸ்ட்பெரன்சி' பன்னாட்டு அமைப்பால் வடமாகாணத்தில் உள்ள பெண் உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்களுக்குத்தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல், கடமை, பொறுப்பு தொடர்பானவதிவிடப்பயிற்சிநெறி வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியாவில்உள்ளவிருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிநெறியில் வளவாளராக நளினி இரட்ணராஜா பங்கெடுத்திருந்தார். நிகழ்வில் ரான்ஸ்ட்பெரன்சி அமைப்பின் இணைப்பாளரும், சட்டதரணியுமான மங்களா சந்தர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-110)

## ரெலோவின் உயர்மட்டக் கூட்டம் வவுனியாவில்

வவுனியா, ஓக. 19

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) உயர்மட்ட கூட்டம் அந்தக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கட்சியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

ரெலோவின் அடுத்த கட்ட நகர்வு, சமகால அரசியல் நிலவரங்கள், வரவிருக்கும் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டது.

குறித்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கட்சியின் செயலர் சிறிகாந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்ணம், கோவிந்தன் கருணாகரம், பிரசன்னா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-110)



## உண்டியல் உடைத்தனரென இருவர் பிடிக்கப்பட்டனர்

மீசாலை வடக்கு ஞான வைரவர் கோவிலில் உண்டியலைத் திருடினர் என்று குற்றஞ்சாட்டி அந்தப் பகுதி மக்கள் இருவரைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது. 18 வயதுகளையுடைய இருவரையே மக்கள் பிடித்துக் கொடுத்துள்ளனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் மீசாலை கேணியடி கந்தசாமி கோவில், மீசாலை காளி கோவில் ஆகிய ஆலயங்களில் தண்ணீர் இறைக்கும் மோட்டர் திருட்டு மற்றும் கோவில் உண்டியல் உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-159)

## எழுத்தூர் குளம் சீரமைப்பு

மன்னார், ஓக. 19

மன்னார் நகர சபைக்குட்பட்ட எழுத்தூர் பகுதியில் காணப்படும் குளத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கையில் மன்னார் நகர சபை ஈடுபட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் மாவட்டத்தில் உள்ள குளங்கள் மற்றும் நீர் நிலைகள் வற்றியுள்ளன.

இந்த நிலையில் மன்னார் நகர சபைக்குட்பட்ட மக்களின் பயன்பாட்டில் காணப்பட்ட குறித்த குளமும் முழுமையாக வற்றியுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனின் பணிப்புரைக்கு அமைவாக நகர சபை உறுப்பினர் மனோ ஜங்கரசர்மாவின் தலைமையில் குறித்த குளம் அகலப்படுத்தப்பட்டு ஆழப்படுத்தப்படுகின்றது.

குறித்த குளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் மண் மன்னார் நகர சபைக்குட்பட்ட சேதமடைந்த வீதிகள் சீரமைக்கப் பயன்படுத்தப்படுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-56)





*வவுனியாவில்*

## 100,000 பனை விதைகளை நடுவதற்கு நடவடிக்கைகள்

*சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பு ஏற்பாடு*

வவுனியா, ஓக. 19

வவுனியாவில் ஒரு இலட்சம் பனை விதைகளை நடுவதற்கு சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஒரு இலட்சம் பனை விதைகளை விதைக்கும் நோக்கத்துடன் வவுனியா சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக நேற்றுமுன்தினம் 17 ஆயிரம் பனை விதைகள் விதைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு குறித்த அமைப்பினரால் 10 ஆயிரம் பனை விதைகள் வவுனியா பிரதேசத்தில் விதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

## பல்கலைக் கழக மாணவர்களால் முல்லைத்தீவில் இலவசக் கல்வி

முல்லைத்தீவு, ஓக. 19

போரால் பாதிக்கப்பட்ட, உதவி தேவைப்படும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'அறிவூற்று' இலவசக் கல்வி வழங்கும் திட்டத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முல்லைத்தீவில் ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாங்குளத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், பெருமளவிலான மாணவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தில் இணைந்துகொண்ட மாணவர்களுக்கு புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-222)






## அறநெறி வகுப்புக்களால் குற்றங்கள் குறைகின்றன

வவுனியா, ஓக. 19

வவுனியா மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அறநெறி வகுப்புக்களால் குற்றச் செயல்களில் இருந்து மாணவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர் என்று தரணிக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

தரணிக்குளம் பகுதியில் அண்மையில் வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் திறந்து வைக்கப்பட்ட அறநெறி கட்டடத்தில் பிரதி ஞாயிறு தோறும் அறநெறிக் கல்வி நடைபெற்று வருகின்றது. இந்தக் கல்வியை சிறுவர்கள் பயில்வதால் அவர்கள் தீய நாட்டங்களில் செல்லாமல் இருப்பதுடன், தீயவர்கள் சிறுவர்களைப் பயன்படுத்துவதும் தவிர்க்கப்பட்டுள்ளது - என்று அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-110)

அரசு உதவவில்லை என்று கூறும் மக்களே

# நாங்கள் தேவைகளுக்கு வந்தால் வரிசையில் காக்க வைக்கலாமா?

*சிறப்புத் தேவையுடைய முன்னாள் போராளி கேள்வி*

யாழ்ப்பாணம், ஓக.19

நாட்டுக்காகக் காலை இழந்தோம். அரசு எங்களுக்கு உதவி புரிவதில்லை. அரசு உதவவில்லை எனக் கூறும் மக்களே! நீங்கள் எமக்கு உதவமுடியாது விட்டாலும் பரவாயில்லை, ஒரு தேவைக்காக நாங்கள் அலுவலகமோ வேறு எங்காவதோ சென்றால் எங்களை வரிசையில் நின்று வருமாறு கூறுகின்றீர்களே! இதைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துச் செயற்படுங்கள்.

இவ்வாறு சிறப்புத் தேவையுடையவராகியிருக்கும் முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்தார்.

"எனக்கு ஒரு கால் இல்லை, இரு பிள்ளைகள். எனது கணவருக்கு இரு கால்களும் இல்லை. அந்தளவு அவலத்திலும் நான் அல்லது என்னைப்போன்றவர்கள் வரிசையில் நின்று தேவையைமுழுமைசெய்து அதன் பின்னர் வீடுசென்று தான் வீட்டு வேலைகளைச் செய்யவேண்டியுள்ளோம்." என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த முன்னாள் போராளி தெரிவித்தார்.

**அரச அதிகாரிகள் சீறிச் சினக்கின்றனர்**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல பணி வெற்றிடங்களுக்கு வேறு மாவட்டத்திலிருந்து நியமனம் வழங்கப்படும் சூழலில், அந்த மாவட்ட இளையோர் பணி இன்றி வீதியில் உள்ளனர்.

இதற்கும் அப்பால் பாதிக்கப்பட்ட பெண்கள் அரசதேவைகள் கருதி அரச அலுவலகங்களுக்குச் சென்றால் அங்குள்ள அதிகாரிகள் சீறிச் சினக்கின்றனர். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்துக்குச் செல்லவே பயமாகவுள்ளது. எங்கு சென்றாலும் இது ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல்கள்" என்னும் தொனிப்பொருளில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் வடக்கு-கிழக்கு மாவட்டப் பெண்கள் சமாசங்கள் இணைந்து பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளைப் பகிர்தல் நிகழ்வு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் லட்சுமி திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பெண்கள் பல கருத்துக்களை முன்வைத்தனர். அதன்போதே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. (த-105)

# வெள்ளாங்குளம்-தேவன்பிட்டி வீதியைத் திருத்தக் கோரிக்கை

*மன்னார், ஓக. 19*

மன்னாரில் வெள்ளாங்குளத்திலிருந்து தேவன்பிட்டி கிராமத்துக்குச் செல்லும் வீதியைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை பிரதேச சபைக்கு உட்பட்ட ஏ-32 வீதியில் வெள்ளாங்குளம் சந்தியிலிருந்து தேவன்பிட்டி கிராமத்துக்குச் செல்லும் வீதி இரண்டு கிலோமீற்றர் தூரம் கொண்டது. கிராமத்திலிருந்து அவசரத் தேவையாகச் செல்வதானால் சிரமத்தையும் தாமதத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உடனடியாக இந்த வீதியைச் சீரமைத்துத் தருமாறு தேவன்பிட்டி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த வீதி, மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. அதன் மாவட்ட முகாமையாளரிடம் கேட்டபோது, குறித்த வீதி 'ஐ' வேலைத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. விரைவில் சீரமைப்பு ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (த-213)



அளவெட்டி தெற்கு வெளிவயல் சிறிமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது. முத்துமாரி அம்பாள் தேரில் ஆரோகணித்து பக்த அடியவர்களுக்கு அருட்காட்சி கொடுப்பதையும், பக்தர்கள் பிரதட்டை நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம். (ம-36)

**வீரசிங்கம் மண்டபத்தில் புத்தகங்கள் கண்காட்சி**

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரை புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நந்தினி சேவியரின் "பிடித்த சிறுகதை" (முகநூல் தொடர்), மலரன்பனின் "பால்வனங்களில்" (நாவல்), க.கோபால பிள்ளையின்" அசை" (சிறுகதை), மேமன்கவியின் "பிரதிகளைப் பற்றிய பிரதிகள்" (விமர்சனம்), கவிதாயினி ஷியாவின் "வலித்திடினும் சலிக்கவில்லை" (கவிதை) ஆகிய புதிய நூல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றை வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் இராகவன் வெளியிட்டு வைக்க நூல்களின் முதற் பிரதிகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் ஓமர் பெற்றுக்கொள்வார். (த)

# நல்லூரில் இன்று



யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று, நல்லூர் இந்து மாணவர் சேவாலய அறநெறிப் பாடசாலையினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில இது இடம் பெறுகின்றது. (த)

***

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வின் ஐந்தாம் நாளான இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் மயிலணி முத்துமாரியம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ நா.சிவசங்கரக் குருக்கள் ஆகியோர் முன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், இ.கர்ஜின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடப் பதில் பீடாதிபதி கலாநிதி, திருமதி. சுகந்தினி முரளிதரன் முதன்மை விருந்தினராகவும், யாழ்ப்பாணம், தேசியக் கல்வியியற் கல்லூரி, விரிவுரையாளர், மா.பிரபாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறிவதிரி பீட விநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் சிறி சந்திர சேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர், சைவப்புலவர் ச.முகுந்தனின் 'எந்தை அருளுண்டேல் எனக்கென்ன குறை?' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக கலாவித்தகர் திருமதி. வ.மங்கைலக்சுமியின் மாணவிகள் வழங்கும் 'வயலினிசை' நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

***

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 7.15 வரை வாத்திய இசை இடம்பெறும். நல்லூர்சோமராகம் இசைமன்ற மாணவர்கள் நிகழ்வை வழங்குவர். நெறியாள்கை கமதா உமாகாந்தன்.

இரவு 7.15 தொடக்கம் 8.15 வரை இசைக்கச்சேரி இடம் பெறும். இதில் பாட்டு விக்னேஸ்வரி நரேந்திரா, வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ம.லோகேந்திரன், கெஞ்சிரா ஜெனில் சங்கர் ஆகியோர் நிகழ்த்துவர். (த)



# குரும்பசிட்டி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

கொடிகாமம், ஓக. 19

யாழ்ப்பாணம் குரும்பைசிட்டி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் அ.அரியரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் பா.கஜதீபன், ச.சுகிர்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதன், கிராம அலுவலர் பொ.தயாநிதி, முன்பள்ளி இணைப்பாளர் சுதாஜினிதேவி சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (த-159)

*வசாவிளானில் விடுவிக்கப்படாதுள்ள*

# வேலுப்பிள்ளை வித்தியாலயத்தை சேனாதிராசா எம்.பி. குழு பார்வை

யாழ்ப்பாணம், ஓக. 19

வசாவிளான் சிறி வேலுப்பிள்ளை மகா வித்தியாலயத்தை மாணவர்களின் பாவனைக்கு விடுவிப்பது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையிலான குழுவினர் குறித்த பாடசாலைக்குச் சென்று நிலமைகளை ஆராய்ந்தனர்.

குறித்த பாடசாலை விடுவிக்கப்படாததால் வசாவிளானில் கொட்டில் அமைக்கப்பட்டு, அதில் பாடசாலை தற்போது இயங்கிவருகின்றது. இதனால் பாடசாலையின் நிரந்தரக் காணியை விடுவிப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா தலைமைஅமைச்சர், கல்வி அமைச்சர், அரசதலைவர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

இந்த விடயம் யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் உள்ளிட்ட குழுவினர் குறித்த பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் சென்று நிலமைகளை ஆராய்ந்தனர்.

பாடசாலையின் நிரந்தரக் கட்டடம் அழிக்கப்பட்ட நிலையில் வெற்றுக் காணியே காணப்படுகின்றது. இருப்பினும் பாடசாலைக் காணியை கையளித்தால் நிரந்தரக் கட்டடம் அமைத்து அங்கே பாடசாலையை ஆரம்பிக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த குழுவினருடன் மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட குழுவினரும் சென்றிருந்தனர். (த-105)



# இனந்தெரியாத கும்பலால் கதவு உடைத்துச் சேதம்!

*கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு*

தென்மராட்சி - கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இனந்தெரியாத கும்பலொன்று வீட்டின் வெளிக்கதவை உடைத்துச் சேதப்படுத்தியது என்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொடிகாமம் பொலிஸார் தாக்குதல் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# குடியிருப்புக்கு மத்தியில் இராணுவம் வேண்டாம்

## வாய்விட்டுக் கூற முடியாதளவுக்கு அவர்களால் அவலங்கள் ஏற்படுகின்றன முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைக் குடும்பங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

வானூர்தி நிலையம் வேண்டாம் என்று- இராணுவம் வேண்டாம் என்று- நாம் முழுமையாகக் கூறவில்லை. ஆனால் கிராமங்களுக்குள், குடியிருப்புக்களுக்கு மத்தியில், மக்களின் நிலங்களில் குந்தியிருக்கும் இராணுவத்தினரை அகற்றுங்கள். இராணுவத்தினர் இத்தகைய இடங்களில் இருப்பதால் வாய்விட்டுக் கூறமுடியாத அவலங்கள் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் போராளி ஒருவர் கருத்து முன்வைத்துக் கோரியுள்ளார்.

'நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல்கள்' என்னும் தொனிப்பொருளில் 'பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளைப் பகிர்தல்' என்ற தலைப்பிலான நிகழ்வு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் லட்சுமி திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிறப்புத் தேவையுடையோர் சங்கத்தின் பெண் பிரதிநிதிகள் என்று ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர். விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் வடக்கு - கிழக்கு மாவட்டப் பெண்கள் சமாசங்கள் இணைந்து இதை நடத்தியது.

அதில் அவர்கள் பல கருத்துக்களை முன்வைத்திருந்தனர். அதன்போதே இராணுவத்தினரை ஊரைவிட்டு அகற்றுமாறு ஆழ்ந்த கருத்தாக வலியுறுத்தப்பட்டன. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

**நுண்நிதி நிறுவனங்களை தாயகத்தில் தடை செய்யுங்கள்**

வடக்கு - கிழக்கில் பெண்களை அதிகம் துன்புறுத்தும் சகல நுண்நிதி நிறுவனங்களும் தடை செய்யப்படவேண்டும். இனிமேல் வங்கிகள் ஊடாகக் குறைந்த வட்டியில் கடன்பெற வழி ஏற்படுத்த வேண்டும். தனி நபர்களுக்கு வீடு இல்லை. மறுவாழ்வு பெற்றுவந்த போராளிகளுக்குக் காணி இல்லை.

இவற்றாலும் அதிக பிரச்சினை எதிர்கொள்ளப்படுகின்றது. இதற்கும் அப்பால் மத்திய வகுப்புக் காணி என்று உள்ள காணிகளில்தற்போதுகுடியிருப்போருக்கு வீட்டு வசதிகள் மறுக்கப்படுகின்றன.

**அருகிலுள்ள மண்ணை நாங்கள் தொட முடியாது**

கிளிநொச்சியில் உள்ள பூநகரிப் பிரதேசத்தில் வீட்டுத்திட்டத்துக்கு அருகிலுள்ள எமது மண்ணை நாம் எடுக்க முடியாதுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்துக்கும் பிற மாவட்டங்களுக்கும் எடுத்துச்செல்லப் படுகின்றது.

**பொலிஸுக்கு வாகனம் வழங்கவும்**

இதேபோன்று பூநகரியில் ஏற்படும் முக்கிய பிரச்சினை, பொலிஸாருக்கு அறிவித்தால் அந்த இடத்துக்கு வருவதற்கு வாகனம் இல்லை என்று பொலிஸார் கூறுகின்றனர். இதனால் எமக்காக என்றாலும் அந்தப் பொலிஸாருக்கு ஒரு வாகனத்தை வழங்குங்கள் எனக் கோரும் நிலையில் உள்ளோம்.

**பாடசாலைகளுக்கு பணம் வழங்கமுடியவில்லை**

பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளுக்காகப் பணம் அறவிடப்படுகின்றது. இதனை பெண் தலைமைத்துவக் குடும்பங்களால் ஈடு செய்ய முடியவில்லை. இதனால் பாடசாலை இடைவிலகலும் காணப்படுகின்றது.

பொலிஸ் நிலையங்களில் தற்போதும் தமிழ்மொழி தெரிந்த பொலிஸார் இல்லை. இதனால் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்றோம்.

இது போன்ற பல பிரச்சினைகளை முன்வைத்தனர்.

தேசிய கொள்கைகள்,பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலர் வி.சிவஞானசோதி இவற்றுக் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

மொழி விடயம் தொடர்பில் தனியான அமைச்சு உண்டு. அவர்களிடம் இதனைக் கொண்டு செல்வேன். இங்கே தெரிவித்த அனைத்தையும் ஒரே ஆவணமாகத் தரும் சந்தர்ப்பத்தில் அதில் எத்தனையை நிறைவு செய்யலாம் என்று முயற்சிக்கின்றேன்.

அதேபோல் மாதாந்தத் தொகையை விடவும் நிரந்தர வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடவே விரும்புகின்றோம். உங்கள் கருத்திட்டத்தையே அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்க முயற்சிப்போம்.

**கோழி வழங்கினால் சமைத்துவிடுகிறீர்களே!**

வாழ்வாதாரத்துக்குக் கோழிகளை வழங்கினால் ஒரு வருடத்தில் உணவாக்கிவிடுகின்றனர். பசுக்களை வழங்கினால் கலாசார ரீதியில் பசுவைக் கொலை செய்யாது நன்றாக வளர்க்கின்றனர். அதனால் ஓர் நன்மையைப் பெறுகின்றனர். தனிநபர்களுக்கு வீடு என்பதனால் அதற்கு மாற்றீடாக நாங்களும் தனி அறை வீட்டுத் திட்டத்தை முன்மொழிய எண்ணியுள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு, அதிக வாழ்வாதாரம் கிடைக்கும் பூநகரிக்கு உலக வங்கியின் நிதியில் குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதனை உடனடியாகச் செய்ய முடியாது. 3 அல்லது 5 ஆண்டுகள் செல்லலாம். வீட்டுத் திட்டத்தில் முதல் தேவை மீள் குடியமர்வு. அதற்காகவே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதேநேரம் இடைத் தங்கள் முகாம்களில் உள்ளவர்களுக்குக் காணிகளை விலைக்கு வாங்கியும் வழங்கப்படுகின்றது. அதனை மேலும் நீடிக்க முடியும்.

**பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்**

பட்டதாரிகள் நியமனத்தில் வேறுபாடுகள் இல்லை. வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம் கிடைக்கும். வாழ்வாதாரம், வீட்டுத் திட்டத்தில் முன்னாள் போராளிகளுக்குச் சிறப்புச் சலுகை வழங்கியுள்ளோம் - என்றார். (த-105)

---



## யாழில் சிறப்புற இடம்பெற்ற தாரா வளர்ப்புப் பயில்களம்

யாழ்ப்பாணம், ஓக. 19

இயற்கைவழி தாரா வளர்ப்பு தொடர்பான அனுபவப்பகிர்வும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணம் கொக்குவில் பொற்பதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இயற்கைவழி வேளாண்மை, விலங்கு வளர்ப்பில் ஆர்வமுள்ள பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். தாரா வளர்ப்பின் அனுகூலங்கள், உணவூட்டல், விற்பனை வாய்ப்புக்கள் உட்பட பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. (ம-222)

---

## ஓ.எம்.பி. அலுவலகம் பணிகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 19

காணாமற் போனோர் விடயத்துக்கு இன்றுவரை தீர்வு கிட்டாத நிலையில், அதற்காக அமைக்கப்பட்ட ஓ.எம்.பி அலுவலகம் (காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தைக் கையாளும் அலுவலகம்) அவர்களைத் தேடி அறியும் பணியை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்ட ஓர் உறவின் தாயாரான கந்தசாமி தவமலர் வலியுறுத்தினார்.

'நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல்கள்' என்னும் தொனிப்பொருளில் 'பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளைப் பகிர்தல்' என்ற தலைப்பிலான நிகழ்வு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் லட்சுமி திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கருத்து முன்வைக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை மிகப் பெரியது. நான் கணவரை இழந்து, இரு பிள்ளைகளையும் இழந்து தனிமையில் வாடுகின்றேன். 3 பேர் காணாமலாக்கப்பட்ட நிலையில் நான் தனிமையில் உள்ளேன். எனது உறவுகளையும், உறவுகளைத் தேடும் ஆயிரக் கணக்கானோரில் நானும் ஒருவர்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்குச் சான்றிதழ் தருவதானால் முதலில் காணாமல் ஆக்கப்பட்டவர் எனப் பதிவுசெய்ய வேண்டும். எமக்கு எங்கள் உறவுகள் வேண்டும். எமது வேதனையை எவரிடம் கூறுவது என்றுகூடத் தெரியாமல் இன்று நிலமை உள்ளது. அரசு எம்மை ஏமாற்றியவாறே உள்ளது. ஓ.எம்.பி . நிறுவனம் இங்கே உடனடியாக அமைக்கப்பட வேண்டும் -என்று மேலும் தெரிவித்தார். (த-105)

---

### யாழ்ப்பாணத்தில் நீண்டகால திட்டம் தவிர்ந்து

# 6,500 மில். ரூபா நிதியில் அபிவிருத்தி திட்டங்கள்

## அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெறும் நீண்டகாலத் திட்டங்கள் தவிர்ந்து, இந்த ஆண்டு 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கான பணிகள் இடம்பெறுகின்றன என்று தேசிய கொர்ள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளையோர் அலுவல்கள் அமைச்சின் செயலர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

'நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல்கள்' என்னும் தொனிப்பொருளில் 'பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளைப் பகிர்தல்' என்ற தலைப்பிலான நிகழ்வு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் லட்சுமி திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டுத்திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கும் அதில் 10 ஆயிரம் கல் வீடு கட்டுவதில் பெண்களுக்கே முன்னுரிமை வழங்கினோம். இதில் பல குடும்பங்கள் நன்மையடைந்தனர். இதில் மாற்றுத் திறனாளிகள், இடம்பெயர்ந்தோர், இந்தியாவிலிருந்து திரும்பியோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகியோருக்கே முன்னுரிமை வழங்கினோம்.

கிடைத்தால் மகிழ்ச்சி கிடைக்காது விட்டால் ஆதங்கம்தான். உதாரணமாக பட்டதாரிகள் நியமனமும் அடங்கும். திட்டங்களில் சில குறைகள் இருக்கலாம். 100 வீதம் சரியாகச் செயற்படும் திட்டம் உலகில் எங்குமே இருக்காது. வாழ்வாதாரத்திலும் இவ்வாறே பெண்களை முதன்மைப் படுத்தி உதவினோம். அந்த முயற்சியில் சிலர் வெற்றி கண்டனர். சிலர் முயற்சிக்கவும் இல்லை. பொதுவாக வெற்றியளித்துள்ளது.

வாழ்வாதார முன்னேற்றத் திட்டங்களை மகளிர் அமைப்புக்கள் ஊடாகவும் முன்னெடுக்கலாம். யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி இந்த ஆண்டு வேலைகள் இடம்பெறுகின்றன.

பருத்தித்துறையில் 18.5 பில்லியன் ரூபாவில் மீன் பிடித் துறைமுகம் அமைக்க முயற்சிக்கின்றோம். அதனை அமைக்க சிலர் கொழும்பிலிருந்து வந்து எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 6 பில்லியன் ரூபாவில் ஐ றோட் திட்ட வீதிகள் அமைக்கப்படவுள்ளன. மருத்துவமனைகள், திக்கம் வடிசாலை உட்பட பல அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன. அதனால் ஒன்றுமே இடம்பெறவில்லை எனக் கூற முடியாது. அதேநேரம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று எனது அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் விடயம் காணாமற் போனோர் அலுவலகத்தின் பணி. அதன் அலுவலகம் யாழில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அவர்கள் சார்பில் நான் பதிலளிக்கமுடியாது.

உங்கள் அமைப்பில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதார நிலைக்கான திட்டங்களை முன்னெடுக்கவும் தேசவழமைச் சட்டத்தின் கீழ் உள்ள காணி விடயங்கள் பற்றி அவதானம் செலுத்துவதோடு நில விடுவிப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்துவோம். இதேநேரம் யாழ்ப்பாணத்தில் இன்னும் 3 ஆயிரம் ஏக்கர் நிலம் படையினர் வசம் என்றால், அதில் வானூர்தி நிலையமும் உள்ளடக்கம். அதனையும் கருத்திற்கொண்டு ஆராயலாம். இதேநேரம் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் இழப்பீட்டு அலுவலகம் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும்.

பனை நிதியத்தையும் சட்டத்தையும் இணைத்துள்ளனர். அவை இரண்டையும் பிரிப்பதற்கும் ஓர் அமைச்சரவைப் பத்திரம் வருகின்றது. எனவே நீங்கள் கோரிய விடயம் தொடர்பில் உரியவர்கள் நேரில் தொடர்புகொள்வதன் மூலம் முழுமை பெற வைக்க முடியும் - என்றார். (த-105)

## இறுகி வைரமாகிப் போயிருக்கும்

# பேரினவாதத்திடமிருந்து உரிமையை மீட்பதில் கூட்டமைப்பு பக்குவமாகவே செயற்படுகின்றது

### அதன் பொதுச் செயலர் தெரிவிக்கிறார்

கொழும்பு, ஓக. 19

இறுகி வைரமாக இருக்கின்ற பேரினவாதத்திடமிருந்து எமது உரிமையைப் பெற்றெடுக்கின்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் பக்குவமாக உலக நாடுகளை அனுசரித்தவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது- இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

அங்கு அண்மையில் நடந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன், தனது ஆட்சியில் வெறுமனே ஆவணங்களில் கிணறு அமைத்தமைதான் மிச்சம். விவசாய அமைச்சின் கைங்கரியம் வேறெதுவுமில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி நடத்திய இரண்டரை ஆண்டுகளில் சிறந்த செயற்றிறனுக்காகத் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளும் வெள்ளி, தங்க விருதுகளைப் பெற்றுள்ளது கிழக்கு விவசாய அமைச்சுத் தொடர்பாக ஒப்பீட்டளவில் கிழக்கில் இரண்டரை ஆண்டுகளிலே ஒருவர்கூட விரல் நீட்டிக் கதைக்க முடியாத அளவுக்கு நாங்கள் செயற்பட்டுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு காரணமாகவே முழுமையாக இல்லாதுவிட்டாலும் அதிகளவான நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அரசியல் கைதிகளிலும் இருந்தவர்களில் அரைவாசிக்கும் மேல் விடுவிக்கப்பட்டுள்ளனர். மிக முக்கியமாக பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையகத்துக்குக் கொண்டு வந்து அங்கு இலங்கையையும் முன்நிறுத்தி, இலங்கை அரசையும் இணங்க வைத்துப் பொறுப்புக் கூறல் விடயத்துக்கு இணை அனுசரணை வழங்கும் விதமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலகம் உருவாக்கப்பட்டது. கூட்டாட்சி என்பதற்கு அடிப்படையான அரசியல் சாசனமொன்றை அமைப்பதற்குரிய செயற்பாடுகள் குறிப்பிட்டளவு தூரத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எந்தக் காலமும் இல்லாத விதத்தில் குறிப்பிட்ட காலத்தில் வடக்கு - கிழக்குக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு அபிவிருத்தி தொடர்பிலும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களால் பல்வேறு நிதிமூலங்கள் கொண்டுவரப்பட்டு அதனூடாகப் பல்வேறு செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபையின் கடந்த ஆட்சியில் முஸ்லிம் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினொரு உறுப்பினர்கள் முண்டுகொடுத்தார்கள் என்று சொல்கின்றார்கள். கிழக்கு மாகாணசபை வெறுமனே பதினெட்டு உறுப்பினர்களை மாத்திரம் கொண்டதாக இருக்கும் என்றால் நிச்சயமாக பதினொரு உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பெற்றிருக்கும். அதில் எந்தவித ஐயமுமில்லை. ஆனால் கிழக்கு மாகாண சபையில் முப்பத்தேழு உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஆட்சியமைப்பதற்கு பத்தொன்பது உறுப்பினர்கள் தேவை. நாங்கள் பதினொரு உறுப்பினர்கள் இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து உறுப்பினர்களும் வருவதற்குத் தயாராக இருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்கு முதலமைச்சுப் பதவியைக் கோரினார்கள். அது முடியாத விடயம். ஏனெனில் கிழக்கு மாகாணம் சிறுபான்மை மக்களாகிய எங்களுக்குரியது. அதில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இருப்பினும் அவர்கள் வந்தாலும் ஆட்சியமைக்க மேலும் மூன்று உறுப்பினர்கள் தேவை.

அதேவேளை ஹாபிஸ் நசீர் அவர்கள் ஏற்கனவே முதலமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவர். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கையெழுத்து வைத்து உருவாக்கிய முதலமைச்சர் அல்ல. கடந்த அரசின் ஒப்பந்தத்தின் படி இரண்டரை வருடங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் மிகுதி இரண்டரை ஆண்டுகள் முஸ்லிம் காங்கிரசும் முதலமைச்சர் பதவியை வகிப்பதாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அடிப்படையிலே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதல் இரண்டரை ஆண்டுகள் முடிந்த பின்னர் முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன், ஜெயம், உதுமாலெப்பை, சுபைர் போன்ற பலரும் கையெழுத்து வைத்து உருவாக்கியவர் தான் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர். அவ்வாறு முதலமைச்சர் உருவாக்கப்பட்டுள்ளபோது, எங்கள் பக்கம் பத்தொன்பது பேரைச் சேர்த்துக் கொள்ள முடியாத யதார்த்த நிலையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் மூலம் அந்த முதலமைச்சருடன் சேர்ந்து ஆட்சியில் நாங்களும் இணைத்துக்கொள்ளப்பட்டோம். இதுவே உண்மை நிலை. இந்த உண்மை நிலையைப் பலமுறை நாங்கள் தெரிவித்தும் வந்துள்ளோம். ஆனால் அவை மக்கள் மத்தியில் சரியான முறையில் கொண்டு சேர்க்கப்படவில்லை.

எமக்குத் தேவைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரு நொடியிலே நாங்கள் செய்துவிட முடியாது. ஒப்பீட்டளவில் பார்த்தால் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் இரண்டரை ஆண்டுகளிலே ஒருவர்கூட விரல் நீட்ட முடியாத அளவுக்கு நாங்கள் செயற்பட்டுள்ளோம்-என்றார். (த)

## உந்துருளி விபத்தில் குடும்பப் பெண் காயம்

சாவகச்சேரி ஓக.19

உந்துருளியில் இருந்து தவறிவீழ்ந்து குடும்பப் பெண்ஒருவர்காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மீசாலைப் பகுதியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மீசாலை வடக்கைச் சேர்ந்த தமிழ்ச் செல்வன் கருணாதேவி (வயது-47)என்றகுடும்பப் பெண்ணேகாயங்களுக்கு இலக்கானநிலையில்சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உந்துருளியின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்த வேளையில் வீதியில் மழைநீர் நிறைந்து காணப்பட்ட குழியில்முன் சில்லு இறங்கியபோது தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ‘கோல்டன் ஸ்டார்’ கழகத்துக்கு நாற்காலிகள் கையளிப்பு

மன்னார் பேசாலை ‘கோல்டன் ஸ்டார்’ கழகத்துக்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான நாற்காலிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கழகத் தலைவரும் தலைமன்னார் பியர் தபால்அதிபருமான சுவஞ்ஞு தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டீ.எம். சுவாமிநாதனின் இணைச்செயலர் பிறமிலஸ்கொஸ்தாகலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

“முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் பேசாலையில் தூரநோக்குடன் செயற்பட்டு வரும் பேசாலை ‘கோல்டன் ஸ்டார்’ கழகத்தினின் தூரநோக்கு செயற்பாட்டைக் கவனத்துக்கு எடுத்திருந்தார்.

இந்தக் கழகமானது கல்வி வளர்ச்சிக்கும், குறிப்பாக வறுமை கோட்டுக்குக் கீழ் வசிக்கும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிலும், சுற்றாடலிலும் தங்கள் கவனத்தை செலுத்தி தூர நோக்குடன்செயற்பட்டுவருகின்றது. இதற்கான உதவிகளை எதிர்காலத்தில் நாம் இந்த கழகத்தின் ஊடாகச் செய்வதற்கானதிட்டத்தைக் கொண்டுள்ளோம்.

பேசாலை ஆலய வளாகத்தில் சுற்றுப்பிரகாரம் செல்லும் பாதையை சீரமைப்பதற்கு15 லட்சம் ரூபா நிதி கோரப்பட்டுள்ளதுடன் பேசாலைப் பகுதியில் ஒரு வீதியைஅமைக்கவும்விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கான உதவிகளும் செய்வதற்கானநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத்தெரிவித்தார். (ஐ-60)

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்மையால் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மாரும் சிரமம்

சாவகச்சேரி ஓக. 19

சாவகச்சேரிசுகாதாரமருத்துவ அதிகாரி பிரிவில் உள்ள3குடும்பநலசேவையாளர் பிரிவுகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்மையால் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மாரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவித்துள்ளனர். நுணாவில் கிழக்கு, மட்டுவில் தெற்கு, கல்வயல் ஆகிய குடும்ப நல சேவையாளர் பிரிவுகளில் 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

ஏற்கனவேஇப்பிரிவுகளில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதாரநிலையக்கட்டடங்கள் தனியாருக்குச்சொந்தமானதென்பதால் அங்கிருந்து சேவைகளைவழங்கமுடியாத நிலையில் நிலையங்கள் மூடப்பட்டன.

இதனால் தற்போது சுமார் 50க்குமேற்பட்ட கர்ப்பிணிகளும், 100க்கு மேற்பட்ட பாலூட்டும் தாய்மாரும் தடுப்பூசிமற்றும்சிகிச்சசை பெற சாவகச்சேரிக்கு வருவதாகத் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதாரமருத்துவஅதிகாரி பணியகத்தில் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்தமூன்று குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் நடத்தப்பட்டுவந்தகட்டடங்கள் தனியாரால் பொறுப்பேற்றதையடுத்து அங்கு வேறு கட்டட வசதி இன்னமும் கிடைக்கவில்லை. இதனால் கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார் போன்றோரை சிகிச்சைகள் வழங்க பணியகத்துக்கு வருகை தருமாறு அறிவித்துள்ளோம்.

இப் பகுதியில் ஆரம்ப சுகாதாரநிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் காணி கிடைக்காததால்கட்டடம்அமைக்க முடியவில்லை. தற்காலிகமாகமாதத்தில்ஒருதடவையாவது சிகிச்சைப் பிரிவை இயக்ககட்டடவசதியில்லாமல் உள்ளது.

இந்தப் பகுதியில் வதியும் கொடையாளிகள் தமது காணியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைக்கக்கூடிய காணித்துண்டை வழங்கினால் அதில் நிரந்தரக் கட்டம் அமைத்து மக்களுக்கு சேவையாற்ற முடியுமெனத்தெரிவித்தனர்.

எழுதுமட்டுவாழ் ஏ -9 வீதியுடன் இணைந்த காணியும், மிருசுவில் விடத் தற்பளை யிலும் பொதுமக்களால் காணி அன்பளிப்பாகக் வழங்கப்பட்டதால் அங்கு தலா 2 மில்லியன் ரூபாசெலவில்ஆரம்பசுகாதார நிலையங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுஅண்மையில் திறந்து வைக்கப்பட்டன. (ஐ-9)



## புனிதஅந்தோனியார் ஆலயத்துக்கு ஓமந்தையில் அடிக்கல் நடப்பட்டது

வவுனியா, ஓக. 19

வவுனியா ஓமந்தை பறநட்டகல் பகுதியில் புனித அந்தோனியார் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு பங்குத் தந்தை தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஓமந்தை பனிக்கன் புளியங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ள புனித அந்தோனியார் ஆலயத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ்நிர்மலநாதன் ஆகியோர்கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நிதியொதுக்கியுள்ளனர். மன்னார் ஆயர் கலாநிதி இம்மனுவல் பொனாண்டோ ஆண்டகை ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டார்.

நிகழ்வில்தமிழ்தெற்குபிரதேச [illegible] உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், ஆலயபங்குமக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (ம)

# விவசாயிகளை அரசராக்குவதே அரசின் முக்கியமான நோக்கம்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.19

விவசாயிகளையும் கைத்தொழில் துறையினரையும் அரசராக்குவதே எமது அரசினதும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினதும் நோக்கம் என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற விவசாய சமூகத்தினருக்கான கிராமங்களைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் நிழல் தரும் வகையில் கிராமங்களை அமைப்பதற்குத் திட்ட மிட்டுள்ளோம்.

பொலன்னறுவை மாவட்டத்துக்கு வரும் வழியில் நாம் கண்ட இயற்கை வளம் மிகவும் புத்துணர்வை ஏற்படுத்துகின்றது. கிராமங்களுக்கே உரிய அழகையும் கொண்டிருக்கின்றது. இது தான் இலங்கையின் உண்மையான வனப்பும், செழிப்புத் தன்மையும் ஆகும். இயற்கை வளத்தை இரசித்துக்கொண்டிருக்கும்போது வந்த காரியமும் மறந்து போகின்றது.

ஆனால் சிலருக்கு நாட்டின் அதிகாரம் கிடைக்கும்போது அவர்களுக்குரிய கடமை மறந்து போகின்றது. கிராமங்களின் முன்னேற்றங்களைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. இந்த நாட்டில் 78 சதவீதம் விவசாயம் சார்ந்த நிலங்களாகவே இருக்கின்றமையை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

சாதாரண கைத்தொழில் துறையினர், நடுத்தர வர்க்கத்தினர், அரச துறையினர். இவர்கள்தான் இந்த நாட்டின் முக்கியமான குடிமக்கள். ஆனால், நாட்டில் வளங்கள் இருந்தபோதும், 54 சதவீதமான தேசிய வருமானத்தை சிறியளவிலான தனவந்தர்களே அனுபவிக்கின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். எங்கள் கண் முன்னே நடக்கும் இந்த அநியாயத்துக்கு இடமளிக்கக்கூடாது.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதைப் போன்றே நாட்டு மக்களின் பொருளாதாரத்தையும் நிலைபெறச் செய்ய வேண்டும். எமது விவசாய நாட்டில் புதிய லிபரல் வாதத்துக்கு இடமளிக்கக் கூடாது -என்றார். (எ)

# இணையத் தளத்தின் மூலமாக புலமைப்பரிசில் கொடுப்பனவு

## கல்வி அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 19

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான நடவடிக்கைகளை செயற்றிறன் மிக்கதாகவும், மாணவர்களுக்கு சிரமம் இல்லாத வகையிலும் இணையத்தளத்தின் மூலம் மேற்கொள்ளும்படி கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உத்தரவிட்டுள்ளார்.

இதே போன்று தரம் 13 வரையிலான கட்டாயக் கல்வியின் கீழ் தொழில்நுட்பக் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தேசிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் தகவல்கள், பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் என்பவற்றை உள்ளடக்கி புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான தகுதியைப் பெற்ற மாணவர்களின் சகல தகவல்களும் ஒன்லைன் முறைக்கு அமைவாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறும் மாணவர்கள் இது வரைகாலமும் தமக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மாதமும் அதற்கான உறுதிச்சீட்டுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் காரணமாக நிலவிய பிரச்சினை மற்றும் தாமதங்கள் இந்த நடைமுறை மூலம் தீர்க்கப்படும் என்று துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-21)

# பெரமுன கூட்டணி யாப்பு தயாரிப்பு நாளை ஆரம்பம்

கொழும்பு, ஓக.19

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமையில் அமைக்கப்படும் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நாளை செவ்வாய்க் கிழமை கூட்டணி யாப்பைத் தயாரிக்கவுள்ளன என்று அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளின் கருத்துக்களை உள்ளடக்கியதாகக் கூட்டணியின் யாப்புக் காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேட்பாளர்கள் உறுதி தர வேண்டும்!

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

அரச தலைவர் தேர்தலில் யார் போட்டியிட்டாலும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றும் உறுதியை வழங்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த 25 ஆண்டுகளில் எனது அனுபவத்துக்கு அமைய யார் நல்லவர் யார் திருடர் என்று என்னால் கூற முடியும். கடந்த 5 தொடக்கம் 10 வருடங்களுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இருந்த அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச தலைவர்கள் பலரும் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள் என்று நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். ஆனால் அமைச்சர் சஜித் பிரேமதாச போன்றவர்கள் அவ்வாறு அல்லர். எங்கள் அரசில் இருக்கின்ற மிகவும் நியாயமான, மக்களின் நலன்கள் மீது அக்கறை கொண்டவர்தான் சஜித் பிரேமதாச.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே பொலன்னறுவையிலும் ஏழை எளிய மக்கள் நலன் கருதி வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

அதேவேளை, ஏனைய அரசியல் தரப்பினர் தொடர்பாக கதைப்பதற்கு நிறையவே இருக்கின்றது. தற்போது அதற்கு நேரம் போதாது.

இந்தநிலையில், நாட்டினுள் போதைப் பொருள்களினால் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. நகர்ப் புறங்களைப் போன்றல்லாது கிராமப் புறங்களில் அதன் தாக்கம் அதிகமாகவே இருக்கின்றது. எமது கிராமிய மக்களை பாதுகாப்பதற்கு அவற்றை முற்றாக ஒழிக்கக்கூடிய ஒரு தலைவர்தான் எனக்கு அடுத்து வர வேண்டும். எனது ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்துக்கும் மனிதவுரிமைகளுக்கும் அதிகமாக இடமளித்துள்ளேன். அதே போன்று எதிர்கால அரச தலைவர் வேட்பாளர்களும் இதற்கு உறுதியளிக்க வேண்டும்-என்றார். (எ)

# ரணில், சஜித், கரு இணைந்து செயற்பட்டால்தான் வெற்றி!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால், ரணில், சஜித், கரு ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து கூட்டாகச் செயற்பட வேண்டும். இவ்வாறு முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச த்லைவர் வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சர் சஜித்தை வேட்பாளராக கொண்டு வர வேண்டும் என கட்சி ஆதரவாளர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். அதைக் கட்சியின் தலைமைகள் ஏற்றுக் கொள்வது போன்று தெரியவில்லை.

எனது கருத்தின்படி, ஐக்கிய தேசியக் கட்சி தனியாகச் செயற்பட்டு வெற்றி பெற முடியாது. கூட்டணியாகச் செயற்பட்டாலேயே வெற்றி பெறலாம். இந்த இலக்கை நோக்கி கட்சியிலுள்ள மூன்று சக்திகளும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டியுள்ளது- என்றார்.

அதேவேளை, ஐ.தே.கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மகிந்த ராஜபக்ச தரப்புக்கு ஆதரவு வழங்கியிருந்தார். (எ)

# விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.19

எல்ல - கம்பரகல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பல்ல கெடுவயிலிருந்து பிடபொல நோக்கிப் பயணித்த முச்சக்க ரவண்டி சுமார் 350 மீற்றர் பள்ளத்தில்வீழ்ந்துவிபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் அவரின் 3 பிள்ளைகள் சிகிச்சைக்காக தெமோதர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சிகிச்சை பயனின்றி 35 வயதான தந்தையும் 8 வயதான மகனும் உயிரிழந்துள்ளனர்.

12 மற்றும் 8 வயதான சிறுவர்கள் இருவரும் பதுளை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (எ)

# கோத்தாவின் பாதுகாப்பை அதிகரிப்பது அவசியமாம்!

## கெஹலிய கூறுகின்றார்

கொழும்பு, ஓக.19

நாட்டின் தற்போது நிலவும் சூழ்நிலையின்படி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வோட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரச்சினைக்குரியதாக மாறியுள்ளது. முதலாவது பொதுக் கூட்டத்திலேயே அதைக் கண்டோம். இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு கணிப்பீடு ஒன்றைச் செய்து தேவையான பாதுகாப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

கோத்தபாய ராஜபக்ச என்பவர் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த நபர் என்பதை எவரும் அறிவர். அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோருவது அரச தலைவர் வேட்பாளர் என்பதற்கு மட்டுமல்ல என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது- என்றார். (எ)

# வடக்கில் மழைக்கு அதிக வாய்ப்புகள்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் காற்று மற்றும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் அதிகரிக்கும். வடக்கு, வடமத்திய, வடமேல், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிற்பகலில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

தற்காலிகமாக வீசும் பலத்த காற்றினாலும் மின்னல் தாக்கங்களினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகா ணங்களில் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது- என்றுள்ளது. (எ)

# நிறைவேற்று அதிகாரத்துடனான அரச தலைவராவார் கோத்தபாய

## மகிந்த அணி கூறுகின்றது



கொழும்பு, ஓக்.19

**கோ**த்தபாய ராஜபக்ச நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராகவே செயற்படுவார் என்று மகிந்த அணி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற ஒரு கட்சி இப்போது இல்லை. அந்த இடத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது. முதன்மைக் கட்சியாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியே உள்ளது. அதனுடன் கூட்டணி அமைக்க ஏனைய கட்சிகளுக்கு இடமுண்டு.

அதில் ராஜபக்ச கொள்கையுடன் இணையக்கூடிய நபர்களே இருக்கவேண்டும். மக்கள் தற்போது ராஜபக்ச யுகம் வேண்டும் என்று கேட்கின்றனர். அதனால்தான் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்துள்ளோம். இதுவரை காலம் அரச தலைவராக இருந்தவர்கள் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளனரா? மகிந்த ராஜபக்ச மாத்திரம் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

கோத்தபாய ராஜபக்ச பேசிக் கொண்டு காலத்தைக் கடத்துபவர் அல்லர். அவர் சொல்வதைச் செய்து காட்டியவர்.

உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளை இரண்டரை ஆண்டுகளில் இல்லாதொழித்தார். அவர் போன்ற ஒருவர் மூலமே நாட்டை மீட்டெடுக்க முடியும். அடுத்த அரச தலைவருக்கும், இப்போதுள்ள அரச தலைவருக்கு உள்ள அனைத்து அதிகாரங்களும் இருக்கும்.

கோத்தபாய ராஜபக்ச நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராகவே செயற்படுவார். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை- என்றார். (எ)

# தெகிவளையில் ஒதுங்கிய படகு தீவிர விசாரணை

கொழும்பு, ஓக.19

தெகிவளை கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய படகொன்று தொடர்பில் கடற்படையினர், கரையோர பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் படகு தொடர்பில் இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் தெகிவளை கரையோரத்தில் ஒதுங்கிய படகை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர். ஆழ்கடலில் விபத்துக்குள்ளானதால் இந்தப் படகு கரையொதுங்கி இருக்கக்கூடும் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (எ)

# ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, ஓக.19

கதிர்காமம் - பெரகிரிகம பகுதியில் கூரான ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.15 மணியளவில் இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்த்னர்.

முகங்களை மூடிக்கொண்டு வீடொன்றுக்குள் புகுந்த மூன்று பேர், வீட்டின் உரிமையாளரை கூரான ஆயுதத்தால் தாக்கியுள்ளனர். பலத்த காயமடைந்த வீட்டின் உரிமையாளர் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (எ)

# சு.கவை இணைத்து கொண்டாலும் தலைமை பெரமுனவிடமே

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டாலும், அந்தக் கூட்டணிக்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியே தலைமை தாங்கும்.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கூட்டணிக் கட்சிகளுடன் நடத்திய பேச்சின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒருங்கிணைந்த எதிரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன.


அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணியின் யாப்பை உருவாக்குவது தொடர்பாகவே முதற்கட்டமாக தற்போது ஆராயப்பட்டுள்ளது. இதுகுறித்து பல்வேறு கருத்துக்களும் கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, இவற்றையெல்லாம் ஆராய்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்புக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதுதான் எமது முதன்மை நோக்கமாக இருக்கிறது. இந்த பெரும் கூட்டணிக்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமை தாங்குவதுதான் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். தற்போதைய சூழ்நிலையில், எமது தரப்புக்கே பலம் அதிகமாக உள்ளது. எவ்வாறாயினும் நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் பேச்சு நடத்தத் தயாராகவே இருக்கிறோம். இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்கிறோம். எனினும், இறுதி முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பது எதிர்க்காலத்தில் தான் தெரியவரும்-என்றார். (எ)

# தேரர்களிடம் மண்டியிட்டு ஆசி பெறும் கோத்தபாய

## மகிந்தவும், வழிபாடுகளில் பங்கேற்பு

கொழும்பு, ஓக.19

நடைபெறவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தாபய ராஜபக்ச தொடர் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.



கடந்த 11ஆம் திகதி கொழும்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் களனி ரஜமகா விகாரையில் வழிபாடுகளை ஆரம்பித்த அவர், மறுநாள் அநுராதபுரத்துக்குச் சென்று பல்வேறு பௌத்த ஆலயங்களில் வழிபாடுகளை நடத்தினார்.

அதன் பின்னர், கண்டியில் உள்ள பௌத்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொண்டு வருவதுடன், மகாநாயக்க தேரர்களையும், முக்கியமான பௌத்த விகாராதிபதிகளையும் சந்தித்து ஆசி பெற்று வருகிறார்.

பேராதனை கெட்டம்பே விகாரைக்குச் சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ச, அதன் விகாராதிபதியான கெட்டம்பே ரஜோபாவனராமாதிபதி வண. கெப்பிட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரரின் முன்னிலையில் மண்டியிட்டு, அவரது ஆசியையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டார். கோத்தபாய ராஜபக்சவுடன் மகிந்த ராஜபக்சவும், இந்த வழிபாடுகளில் பங்கேற்று வருகிறார்.

தேர்தலுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்னதாக கோத்தபாய ராஜபக்ச மற்றும் பொதுமக்கள் முன்னணியினர் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மத வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்துக்கும் கோத்தபாய ராஜபக்ச விரைவில் வருவார் என்று நம்பப்படுகிறது. (எ-21)

# சம்மாந்துறை பகுதியில் மீட்கப்பட்டது கைக்குண்டு

அம்பாறை, ஓக. 19

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)



# சிக்கன கடனுதவு கூ. சங்கங்களின் சங்கமம் நிகழ்வு!

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்திய சங்கமம் நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பாரதி ஆனந்தம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வாகீசன், மாவட்டச் செயலர் எம்.கனீபா, பிரதேச செயலர்களான க.பரந்தாமன், கா.உதயராஜா சமாசத்தின் முன்னாள் தலைவர் நா.சேனாதிராசா உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.





முன்னாள் வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவரும், வவுனியா நகரசபை உறுப்பினருமான நா.சேனாதிராஜாவின் 24 வருட கூட்டுறவு சேவையை பாராட்டி அவருக்கு ஆளுநரால் மதிப்பளிக்கப்பட்டது. (ம-110)

## கரன்னாகொட, குணதிலகவுக்கு வழங்கிய மதிப்பு முறையற்றது!

*இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் தளம் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.19

குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக ஆகியோரைத் தரமுயர்த்தி அரச தலைவரால் வழங்கப்பட்டிருக்கும் மதிப்பளிப்பு முறையற்றது.

இவ்வாறு இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் தளம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட அட்மிரல் ஒப் த ஃப்ளீட் ஆகவும், முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக எயார் சீப் மார்ஷலாகவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமை, மனிதாபிமான செயற்றிட்டத்தின் கீழ் நாட்டுக்கு ஆற்றிய சேவை உள்ளிட்டவற்றுக்காகவே இவ்வாறு தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று இது தொடர்பில் அரச தலைவர் வெளியிட்ட அரசிதழ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்து.

கடத்தல், சட்டத்துக்கு முரணான வகையில் தடுத்து வைத்திருந்தமை, குறைந்தபட்சம் 11 பேரையேனும் வலிந்து காணாமலாக்கியமை உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார் என்று வசந்த கரன்னாகொட வழக்குகளை எதிர்நோக்கியிருக்கிறார்.

அதேபோன்ற ரொஷான் குணதிலக பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை உள்ளிட்ட பொது இடங்களை இலக்கு வைத்து குண்டுத்தாக்குதலுக்குக் கட்டளையிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி உக்ரேனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மிக் விமானங்கள் தொடர்பிலும் அவர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஏதேனும் குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் கூறப்படும் அரச உத்தியோகத்தவர்களுக்கு இத்தகைய கௌவரம் அல்லது வேறு நன்மைகளை வழங்குவதெனின் நீதிமன்றத்தின் ஊடாக அவர் குற்றமற்றவர் என்று முற்றாக விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

குற்றம் புரிந்தனர் என்று சந்தேகிக்கப்படுவர்களுக்கு இவ்வாறான மதிப்பளிப்பு வழங்கப்படுவதன் ஊடாக அவர்களின் குற்றம் அங்கீகரிக்கப்படுவதாக அர்த்தப்படுகிறதா என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தீபிகா உடகமவிடம் வினவியபோது, அரச அதிகாரி ஒருவருக்கெதிராக குற்றச்சாட்டு பதிவாகியிருக்கும்போது அவரை நீதிமன்றம் குற்றமற்றவர் என்று விடுவித்த பின்னரே இத்தகைய மதிப்பளிப்பையோ அல்லது தரமுயர்த்தலையோ வழங்க முடியும்.

அவ்வாறல்லாத பட்சத்தில் நாட்டின் சட்டம், ஒழுங்கு மீறப்படுகிறது. அதுமாத்திரமன்றி மதிப்பளிப்பைப் அதிகாரிகள் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை மற்றும் மதிப்பு என்பனவும் இல்லாது போகும் என்று பதிலளித்துள்ளார்.

இந்தநிலையில் அரச தலைவரால் வழங்கப்பட்டிருக்கும் மதிப்பளிப்பு முறையற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-61)

# சு.க. - பெரமுன உறுப்பினர்களை இணைத்தே கூட்டணி அமையும்!

## ஐ.தே.க. பொதுச் செயலர் அகிலவிராஜ் தெரிவிப்பு

*கொழும்பு, ஓக.19*

**சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள் பலர் எதிர்காலத்தில் எம்முடன் இணையவுள்ளார்கள். அவர்களையும் இணைத்துக்கொண்டு பலமான கூட்டணி அமைக்கப்பட்டதன் பின்னர் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் தீர்மானிக்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்ற குழுவுடன் இணைந்துதான் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.**

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலர் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஹோமாகம கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் களஞ்சியசாலை கட்டடத் தொகுதியில் 2020 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை விநியோகம் செய்யும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழு ஆகியவற்றுக்கு இடையில் இணக்கப்பாடுஎட்டப்பட்டதன் பின்னரே தீர்க்கமான முடிவைக் கூறமுடியும்.

கட்சி தலைவர் இருக்கிறார். கட்சி அதிகாரிகள் குழு இருக்கிறது. இவர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் தீர்மானத்தை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இன்னும் பலர் இணையவுள்ளார்கள். குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பொதுஜன பெரமுன) உறுப்பினர்கள் பலர் எம்முடன் இணைவார்கள்.

புதிய கூட்டணி அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் அவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர். வெகு விரைவில் கூட்டணியை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இலகுவாக வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் எம்மிடம் இருக்கின்றார். இது புதியதொரு விடயமல்ல. நாட்டு மக்கள் எந்த வேட்பாளர் எவர் என்று நன்கு அறிவார்கள்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சி இடம்பெற்ற முறை, நல்லாட்சி இடம்பெற்றதா? இல்லையா? என்பதும் தொடர்பாகவும், வெள்ளை வான் கலாசாரம் பற்றியும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

நாட்டை முறையாக ஆட்சி செய்யக் கூடிய, பன்னாட்டுடன் இணைந்து பயணிக்கக் கூடிய வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார் என்று கட்சியின் பொதுச் செயலர் என்ற ரீதியில் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் வெற்றி நிச்சயம் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். கூட்டணியானாலும், கட்சியானாலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரே வேட்பாளராக நியமிக்கப்படுவார் என்பதில் மாற்றமில்லை. அதிகூடிய வாக்குகளால் எம்மால் வெற்றி பெற முடியும்.

கடந்த வருடம் ஒக்ரோபரில் இடம்பெற்ற அரசியல் சூழ்ச்சியின்போது நாம் இதனையே கூறினோம். அதேபோன்று இந்தமுறையும் நாம் வெற்றி பெறுவோம். போர் நிறைவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல், கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் ஆகியவற்றின் முடிவுகளைப் அவதானிக்கும் எம் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் அதிக வாக்குகளை பெற்றுக் கொண்டதை அறிந்து கொள்ளலாம்.

இன வாதத்தையும், மத வாதத்தையும் தூண்டி தேர்தலில் வெற்றிபெறமுடியாது. இலங்கையர் என்ற ரீதியில் சிந்தித்துச் செயற்படும் கட்சிக்கே இந்நாட்டின் எதிர்காலத்தை வெற்றி கொள்ள முடியும் - என்றார். (எ-31)

## அரச தலைவர் வேட்பாளரால் பறிபோகப் பார்த்த உந்துருளி

கொழும்பு, ஓக.19

அரச தலைவர் வேட்பாளர் தெரிவு தொடர்பாக கட்சிகளின் ஆதரவாளர்கள் இருவரிடையே நடந்த சுவாரஸிய சம்பவம் ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அண்மையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவராக அறிவிக்கப்பட்டார். அதற்கு முன்னர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆதரவாளர் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரும் பந்தயம் கட்டியுள்ளனர்.

இவர்கள் நாகொட பிரதேச சபை உறுப்பினர்கள் என்று கூறப்படுகின்றது. கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவாரா? மாட்டாரா? என்பதுதான் அவர்களின் பந்தயம். தெரிவு செய்யப்படுவார் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆதரவாளர் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும், தெரிவு செய்யப்படமாட்டார் என்று ஐ.தே.க. ஆதரவாளர் தனது உந்துருளியையும் பந்தயம் வைத்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டார். அதையடுத்துப் பந்தயத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆதரவாளர் வெற்றி பெற்றார்.

அதையடுத்து ஐ.தே.க. ஆதரவாளர் தனது உந்துருளியை அவரிடம் கொடுக்க நேர்ந்தது. ஆனால் உந்துருளியைப் பெற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டிய அவர், அதற்குப் பதிலாக ஐ.தே.க. ஆதரவாளர் தனது கிராமத்தில் கோத்தபாய ராஜபக்சவை வாழ்த்திப் பதாகை அமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார் என்று கூறப்படுகின்றது. (எ)

## சட்டவிரோத மதுபானம்: முறையிட புதிய இலக்கம்

கொழும்பு, ஓக.19

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்பதற்காக புதிய தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று நிதி அமைச்சு அறிக்கையூடாகத் தெரிவித்துள்ளது.

இதற்காக 1913 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன், இது 24 மணித்தியாலங்களும் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசி இலக்கத்தினூடாக கிடைக்கும் முறைப்பாடுகளின் இரகசியத் தன்மை பேணப்படும் எனவும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமாக மதுபானத்தை வைத்திருத்தல், கொண்டுசெல்லல், அனுமதி வழங்கப்பட்டுள்ளதைவிட அதிக எண்ணிக்கை போத்தல்களை வைத்திருத்தல் ஆகியன தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## இப்போதைய அரசமைப்பில் இளையோர் அவநம்பிக்கை!

*தலைமை அமைச்சர் கூறுகின்றார்*

கொழும்பு, ஓக.19


அரசமைப்புத் தொடர்பாக இளைஞர்கள், யுவதிகள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசமைப்பு மற்றும் கொள்கைகளை மாற்றுவதற்கு நாம் முன்னிற்கின்றோம்.

தற்போதைய அரசியல் அடிப்படைக்கு மத்தியில் ஏனைய நாடுகளுக்கு சமமாக அபிவிருத்தி காண்பதற்கு எம்மால் முடியாது உள்ளது.

இந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டும். தற்போது உள்ள நடைமுறைகளை உடனடியாக மாற்ற வேண்டும்- என்றார். (எ)



### ஐ.எஸ்.ஐ.எஸ். கைவரிசை

# திருமண நிகழ்வில் குண்டுத் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் 63 பேர் சாவு!

காபூல்,ஓக.19
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 63 பேர் சாவடைந்தனர். 182க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். ஆப்கானிஸ்தானில் நடந்துவருகின்ற தாக்குதலில்மிகமோசமான, பெரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது.



இது குறித்து மேலும் தெரியவருவதாவது: நேற்றுமுன்தினம் இரவு காபூல் நகரில் உள்ளஷர்இதுபாய்என்றழைக்கப்படுகின்ற துபாய் சிட்டி திருமண மண்டபத்தில் ஷியா இனத்தவர்களின் திருமண நிகழ்வு ஒன்று நடந்தது. அதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்தனர். அங்கு இசைக் கச்சேரியும், உணவு அருந்தும் நிகழ்வும் நடந்துகொண்டிருந்தன. அப்போதேஅங்குதற்கொலைத்தாக்குதல்நடத்தப்பட்டது.

ஏறக்குறைய20நிமிடங்களுக்குமண்டபத்துக்குள் செல்ல முடியாத அளவுக்குப் புகை சூழ்ந்திருந்தது. ஆண்கள் குழுமியிருந்த பகுதியில்இந்தத்தாக்குதல்நடத்தப்பட்டதால் இதில்அதிகம்ஆண்களே சாவடைந்தனர்.

ஆப்கான் மாநில உள்துறை அமைச்சகத்தின்செய்தித்தொடர்பாளர்நஸ்ரதன்ரஹிமி இது குறித்துக்கூறுகையில், இந்தத்தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை.

இது குறித்து விசாரணை நடந்து வருகிறது என்றார். கடந்த மாதம் 12ஆம் திகதி ஆப்கானின்கிழக்குப்பகுதியிலுள்ளநான்கார்ஹார் எனுமிடத்திலுள்ளதிருமணவீட்டில்நடத்தப்பட்டதற்கொலைத்தாக்குதலில்6பேர்கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் நடத்தியது பின்னர் தெரியவந்திருந்தது.

**தலிபான்கள் மறுப்பு**

தலிபான்களுக்கும் ஆப்கான் அரக்கும் இடையே நடந்து போர் நடந்து வந்தாலும், ஆப்கானிஸ்தானில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளை குறைத்துக் கொண்டு, அங்கு அமைதி திரும்புவதற்காகத் தலிபான்களுக்கும், அமெரிக்க அரசுக்கும் இடையே தற்போது ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அது இறுதிக்கட்டத்தை நேற்றுமுன்தினம் எட்டியநிலையில்இந்தமனிதவெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமைதிப் பேச்சில் ஈடுபட்டு இருக்கும் தாங்கள் இந்தத் தாக்குதலில்ஈடுபடவில்லைஎன்றுதலிபான்கள் மறுத்தனர். ஷியா பிரிவினர் சார்பில் நடத்தப்பட்டதிருமணத்தில்இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஷியாபிரிவினருக்கும், சன்னிபிரிவினருக்கும்இடையே ஆப்கானில் மோதல் நீடித்து வருகிறது.

அந்தமோதலின்நீட்சியாகஇந்தத்தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கலாம் எனத் தெரிகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் சன்னி பிரிவினர் என்பதால், அந்த அமைப்பின் சார்பில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டருக்கலாம் என்று பலமாக நம்பப்பட்டது. இந்த நிலையில் ஐ.எஸ். அமைப்பினர் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரினர்.

# ஐ.நாவில் காஷ்மீர் மக்களின் குரல்

### உள்நாட்டு விடயம் என்று கூறி நழுவுகிறது இந்தியா

நியூயோர்க்,ஓக.19
காஷ்மீர் விவகாரம் குறித்த ஆலோசனைக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கியநாடுகள்சபையில்இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஐ.நாவின் நிரந்தர உறுப்பு நாடுகள் பங்கேற்றன. காஷ்மீர் மக்களின் குரல் ஐக்கிய நாடுகள் சபையில் எதிரொலித்தது. காஷ்மீர் மக்களது வலி, துன்பம், மனரீதியாக எதிர்கொள்ளும் போராட்டம் போன்றவை ஐக்கிய நாடுகள் சபையில் எதிரொலித்தது.

காஷ்மீரில் நிலவுவது மோசமான சூழ்நிலை. அது தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்துக்குப் பிறகு ஐ.நாவுக்கான இந்தியாவின்தூதர்செய்யது அக்பரூதீன் பேசும்போது, "ஜம்மு காஷ்மீர் விவகாரம் என்பது இந்தியாவின் உள்நாட்டு விடயம். இதில் மற்ற நாடுகள் தலையிட வேண்டிய அவசியமில்லை" என்று தெரிவித்தார்.

**பின்னணி**

இந்தியா-பாகிஸ்தானிடையேபிணக்கிலுள்ள ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அரசமைப்பை நீக்கியது இந்தியா.

அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காஷ்மீர் மக்களை ஒடுக்கும் வகையில், இந்திய இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அங்கு குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் மீது காஷ்மீர் மக்கள் கல்லெறி நடத்தி வருகின்றனர்.

# ஐ.நாவில் இந்தியாவின் ராஜதந்திரத்தால் பாகிஸ்தானைத் தனிமைப்படுத்தி வெற்றி!

### இந்திய ஊடகங்கள் அதிரடிச் செய்தி

ஜம்முகாஷ்மீர்விவகாரத்தைஐ.நா. பாதுகாப்புச் சபையில் முன்வைத்து உலகின் கவனத்தை ஈர்ப்பதற்குப் பாகிஸ்தான் மேற்கொண்ட திட்டத்தை இந்திய ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் தகர்த்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அந்தக்கூட்டத்தில்பெரும்பாலான நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்ததால் பாகிஸ்தானின் முயற்சி தோல்வியடைந்தது என்றும் அவை சுட்டிக்காட்டின.

குறித்த கூட்டத்தில்சீனாஉள்ளிட்ட5நிரந்தர உறுப்பு நாடுகளும், 10 நிரந்தர மற்ற உறுப்பு நாடுகளும் கலந்து கொண்டன என்றும்- அந்தக்கூட்டத்தில்பாகிஸ்தான் அனுதாபம்தேடமுயன்றதாகவும்இந்திய ஊடகங்களின் குறித்த செய்தி அமைந்தது. காஷ்மீரில்இயல்புநிலைதிரும்பவும், அங்கு வளர்ச்சியை ஏற்படுத்தவும் இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் முயற்சிக்குப் பன்னாட்டுச் சமூகம் ஒப்புதல் தெரிவித்துள்ளது என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் தற்போதைய நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் மாத்திரமன்றிக் காஷ்மீர் மக்களும் உடன்படாத நிலையில்இராணுவஅடக்குமுறையால்அங்கு பதற்றத்தைஏற்படுத்திவருவதைமறைக்கும் இந்தியாவின் ராஜதந்திரமே இது என்றுபன்னாட்டுஅரசியல்அவதானிகள் பரவலாக விசனம் தெரிவித்தனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் மனதில் கூடுதல் தைரியம் ஏற்படும். எதிர்ப்புக்களை சாதுரியமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். நிலு வைப் பணம் வசூலாகும்.

**இடபம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணிபுரிவீர்கள். உபரி பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** சொந்த விஷயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். நல்ல வளர்ச்சி மாற்றத்தை உருவாக்கும். பணவரவை விட புதிய இனங்களில் செலவு ஏற்படும்.

**கடகம்:** உறவினரின் பேச்சை தொந்தரவாக கருதுவீர்கள். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெற புதிய வழிகளைச் சிந்திப்பீர்கள். கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

**சிம்மம்:** இடையூறு விலகி நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும். காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**கன்னி:** : உங்களின் தனித்திறமையை நண்பர் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து மன நிறைவை உருவாக்கும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபடக்கூடாது. தொழிலில் உள்ள குளறுபடியை சரிசெய்வதால் ஓரளவு வளர்ச்சி கிடைக்கும். அத்தியாவசிய செலவுக்கு கொஞ்சம் பணம் கடன் பெறுவீர்கள். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

**விருச்சிகம்:** முக்கியமான பணி நிறைவேற தாமதம் ஆகலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்றம் செய்வீர்கள்.

**தனுசு:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். ஒதுக்கி வைத்த பணியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும்.

**மகரம்:** இடையூறு செய்தவர்களை அடையாளம் காண்பீர்கள். புதிய முயற்சி ஓரளவு நன்மை தரும். தொழில், வியாபாரம் தாமதகதியில் இருக்கும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். குடும்ப உறுப்பினர் பாராட்டி ஊக்கப்படுத்துவர். தொழில், வியாபார வளர்ச்சியில் திருப்திகர முன்னேற்றம் ஏற்படும்.


**மீனம்:** பணிகளில் அதிக கவனமுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். சராசரி பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாற்றம் செய்வீர்கள்.

# ஈரானின் கப்பலை விடுவித்தது பிரிட்டன் கைப்பற்ற உத்தரவிட்டது அமெரிக்கா

## கப்பலைச் சூறையாட முயற்சிக்கிறது அமெ.- ஈரான் குற்றச்சாட்டு

லண்டன்,ஓக.19

ஐரோப்பியஒன்றியத்தின்தடையைமீறிசிரியாவுக்கு எண்ணெயைக் கொண்டு சென்றதாகக்குற்றஞ்சுமத்திப்பிரிட்டனின்தன்னாட்சிப் பிராந்தியமான ஜிப்ரால்டர் கடற்பகுதியில் வைத்துக் கைப்பற்றிய ஈரானின் எண்ணெய்க் கப்பலை ஒரு மாதமாகத் தடுத்து வைத்திருந்த பிரிட்டன், அதை விடுவித்தது.




ஜிப்ரால்டரின் அதிகாரிகளிடம், கப்பலில் உள்ள எரிபொருள் சிரியாவுக்குக் கொண்டுசெல்லப்படாதுஎன்றுஈரான் எழுத்து வடிவில் உறுதியளித்ததை அடுத்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக ஜிப்ரால்டர் அரசு தெரிவித்தது.

இதனால் அந்தக் கப்பலை விடுவிப்பதற்கு ஜிப்ரால்டர் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டது.

அமெரிக்காவின் வேண்டுகோளை மீறிஅதைப்பிரிட்டன்செய்துள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

'இதனால்அந்தஎண்ணெய்கப்பலைக் கைப்பற்றுமாறுஅமெரிக்கநீதித்துறை உத்தரவிட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த நீதிமன்ற உத்தரவுக்கு பிரிட்டன் மாற்றுஜிப்ரால்டர்அதிகாரிகள்எவரும் பதிலளிக்கவில்லை.

இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்த ஈரானின் அயலுறவுத்துறை அமைச்சர் ஜாவித் ஜாரிவ்ப், இந்தக் கப்பல் விடுவிக்கப்படுவதைத் தடுத்துஅதைச்சூறையாடுவதற்குஅமெரிக்கா முயற்சிக்கிறது என்று தெரிவித்தார்.

### பின்னணி

அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் அமெரிக்கா - ஈரான் இடையே ஏற்பட்ட பிணக்கால் இரண்டு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை நீடிக்கிறது. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளைவிதித்துள்ளதுஅமெரிக்கா. அந்தஒப்பந்தத்தில்அங்கம்வகிக்கின்ற ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட ஐரோப்பியநாடுகள்சிலவும்ஈரான்மீது சில தடைகளை விதித்துள்ளன. அமெரிக்கா- ஈரான் முறுகலுக்கிடையில் ஈரானின்எண்ணெய்க்கப்பல்ஒன்றை ஜிப்ரால்டர் கடற்பகுதியில் வைத்துப் பிரிட்டன் கைப்பற்றியது.

தனது தடையை மீறிச் சிரியாவுக்கு எண்ணெய்கடத்தியதாகக்குற்றஞ்சாட்டியேஅந்தக்கப்பலைப்பிரிட்டன்கைப்பற்றியது. பின்னர் பிரிட்டனுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் ஒன்றைக் ஹோர்மோஸ் நீரிணைப் பகுதியில் வைத்து ஈரான் கைப்பற்றியது. அதற்குக் காரணம் குறித்த பிரிட்டன் கப்பல் நிபந்தனைகளை மீறிப் பயணித்தமையே என்றது ஈரான். இந்தநிலையிலேயேஈரானின்கப்பல் விடுவிக்கப்பட்டுள்ளது.



# கிரீன்லாந்து விற்பனைக்கு இல்லை ட்ரம்ப்பின் ஆசைக்கு முற்றுப்புள்ளி


கோபன்கெஹன்,ஓக.19

டென்மார்க்கின் தன்னாட்சிப் பிராந்தியமான கிரீன்லாந்துத் தீவை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார் அமெரிக்கா அரச தலைவர் ட்ரம்ப். இந்த நிலையில் கிரீன்லாந்து அரசு அதன் இணையதளத்தில் 'கிரீன்லாந்துத் தீவு விற்பனைக்கு அல்ல' என்று பதிவிட்டது.

1946ஆம் ஆண்டு 100 மில்லியன் டொலர்கள் தருவதாக டென்மார்க்கிடம்அமெரிக்காவின்அப்போதையஅதிபர்.கிரீன்லாந்துத்தீவுக்குவிலைபேசியிருந்தபோதிலும் அதற்குடென்மார்க் உடன்படவில்லை. தற்போது ட்ரம்ப்ப் கிரீன் லாந்தை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். கிரீன்லாந்து நிர்வாகம் இப்படிப் பதில் அளித்துள்ள நிலையில், அடுத்த மாதம் ட்ரம்ப் டென்மார்க்குக்குப் பயணம் செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இரசாயன ஆயுதங்கள் மூலம் மக்களை கொல்கிறது சிரியா

## பிரிட்டன் தெரிவிப்பு



லண்டன்,ஓக.19

சிரியா தன்னுடைய சொந்த மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தும் நாடு என்று கூறியது பிரிட்டன். ஜிப்ரால்டர் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட ஈரானின் கப்பலை விடுவித்தபோதே அது இவ்வாறு குறிப்பிட்டது.

'கிரேஸ் 1' என்ற குறித்த கப்பல் சிரியாவுக்கு எண்ணெய் எடுத்துச் செல்லாது என்று ஈரான் தரப்பு எழுத்தில் அளித்த உறுதியின்படி செயற்பட வேண்டும் என்றும் பிரிட்டனின் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த கப்பல் சிரியாவை நோக்கி எண்ணெய் கொண்டு செல்கிறதுஎன்றுகூறி.ஜிப்ரால்டர்அரசின்கோரிக்கையின்படி, பிரிட்டன் கடற்படையினர் குறித்த கப்பலைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பறவைகள் மோதியதால் சோளத் தோட்டத்தில் தரையிறங்கிய வானூர்தி

மொஸ்கோ, ஓக.19

ரஷ்யாவின் மொஸ்கோ சுகோவ்கி வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்ட 'ஏ-321' என்ற வானூர்தி 233 பயணிகளுடன் ஒரு சோளத்தோட்டத்தில் தரையிறங்கியது.

கிட்டத்தட்ட797அடிஉயரத்தில் பறந்து கொண்டிருந்த இந்த வானூர்தியின் இயந்திரங்களில் ஒன்றுக்குள் பறவைக்கூட்டம் ஒன்று சிக்கிக்கொண்டமையே அது சோளத்தோட்டத்துக்குள்தரையிறங்குவதற்குக் காரணம்.

பறவைக்கூட்டம் புகுந்த இயந்திரம் செயலிழந்ததால் மற்றைய இயந்திரத்தின் மூலமாக வானூர்தி நிலையத்துக்குப் பயணித்து அதைத் தரையிறக்கமுயன்றுஅதுமுடியாத சூழலிலேயே இவ்வாறு சோளத்தோட்டத்துக்குள் தரையிறக்கப்பட்டது.

குறித்த தோட்டத்தில் நன்றாக வளர்ந்து இருந்த சோளக் கதிர்கள் மெத்தையைப்போல் வானூர்தியைத் தாங்கிப் பிடித்ததால் பெரும்விபத்துத்தவிர்க்கப்பட்டு அதிலிருந்த 233பயணிகளும் உயிர் பிழைத்தனர்.

குறித்த் வானூர்தியைப் பாதிப்பின்றித் தரையிறக்கிய விமானிகளின் சாதுரியத்தைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.



இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா மாகாணத்தின் கராவாங் கரையோரத்தில் எண்ணெய்க்கசிவுபரவியமண்ணைச்சாக்குகளில்இட்டு, அந்தச்சாக்குகளைவேறு பகுதிக்கு எடுத்துச் செல்லும் தொழிலாளர்கள் இவர்கள். ஜாவாக் கடலில் உள்ள ஓர் எண்ணெய்க் கிணற்றில் ஏற்பட்ட கசிவைத் தூய்மைப்படுத்தும் முயற்சியே இது. இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அந்த நாட்டு மாநில எரிசக்தி நிறுவனமான 'பெர்டாமினா' நீருக்கடியில்ஏற்பட்டுள்ள இந்த எண்ணெய் கசிவை, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் முழுமை செய்து தருவதாக உறுதியளித்துள்ளது.

## ஹொங்கொங் விவகாரம்

# போராட்டத்துக்கு ஆதரவாக ஆஸ்திரேலியாவில் பேரணி

## பேரணியில் சீனர்களால் குழப்பம்

சிட்னி,ஓக.19

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் கைதிகளை, சீனாவிடம் பரிமாற்றம் செய்யும் தீர்மானத்தை ஹொங்கொங் நிர்வாகம் கொண்டுவந்ததை எதிர்த்துப் போராட்டம் நடத்தி வரும்ஹொங்கொங்போராட்டக்காரர்களுக்குஆதரவாகஆஸ்திரேலியாவில்பேரணிநடைபெற்றது. ஆஸ்திரேலியாவின் சிட்னி மற்றும் மெல்போர்ன் நகரங்களில் நடந்த இந்தப் பேரணிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ஹொங்கொங்கில் கைதிகள் பரிமாற்றத் தீர்மானத்தை முழுமையாக நீக்குமாறும், அதற்காகப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீதான கலவர வழக்குகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தி இந்தப் பேரணியை நடத்தினர்.

பேரணியின் போது ஒற்றுமை பற்றிய வாசகங்கள் ஏந்திய பதாகைகளையும், போராட்டத்தில் காயமடைந்தவர்களின் படங்களையும் ஏந்திக்கொண்டு வந்தனர். அனைவரும் முகமூடிகள் அணிந்திருந்தனர். சிட்னிநகரின்மார்ட்ன்என்றஇடத்தில்நடந்த பேரணியில் திடீரெனச் சீன ஆதரவாளர்கள் நுழைந்து 'ஹொங்கொங் சீனாவின் ஒரு பகுதி' எனக் கோஷமிட்டனர்.

இதனால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. இதே போன்று மெல்போர்ன் நகரிலும் பேரணியில் சீன ஆதரவாளர்கள் குறுக்கிட்டதால் இரண்டு தரப்பினருக்கும்வாக்குவாதம்ஏற்பட்டது. பின்புபொலிஸார் நிலமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.



## பொலன்னறுவையில்...

பிடித்துள்ளது. சிறிலங்கா மக்கள் முன்னணியின் வேட்பாளராக கோத்தபாய அறிவிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ இதுவரை தமது வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித்தையே அறிவிக்கவேண்டும் என்று கட்சியில் பெரும்பாலானவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். மறுபுறம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரச தலைவர் வேட்பாளரை இன்னமும் அறிவிக்கவில்லை.
மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டுக்கான பேச்சு நடத்திய போதும் அதில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இருவரும் ஒரே மேடையில் ஏறியதுடன் ஒருவரை ஒருவர் புகழந்து தள்ளியுள்ளனர்.
அரசியல் அவதானிகள் தற்போதைய சூழலில் இது முக்கியமான விடயம் என்று குறிப்பிடுகின்றனர். (ஒ,5,21)

(தொடர்புடைய செய்தி 16ஆம் பக்கம்)

## கோத்தா...

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.
மத்துகமையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சட்டரீதியற்ற ஒருவரை அரச தலைவர் வேட்பாளராக அறிவித்து மக்களை ஏமாற்றியுள்ளது. அண்ணனும் தம்பியும் தெரிந்து செய்தார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. பிறந்த நாட்டை கைவிட்டு, அமெரிக்கக் குடியுரிமையை பெற்றுக்கொண்ட ஒருவர் நாட்டை கட்டியெழுப்ப தேவையில்லை. நாட்டை கட்டியெழுப்ப தயாரான உண்மையான தலைவர்கள் எமது முகாமில் இருக்கின்றனர். நான், மகிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச, தினேஷ் குணவர்தன போன்றவர்கள் எப்போதும் நாட்டை கைவிட்டு, வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்றதில்லை -என்றார். (ஒ,5)

## வடக்குக்கும்...

லங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய இளைஞர் மாநாட்டுக்கு வடக்கு மாகாணத்திலிருந்தும் இளைஞர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இந்த ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் கட்சியின் இளைஞர் அணி மாநாடு நடைபெறவுள்ளது. இந்த அணிக்கு நாமல் ராஜபக்ச தலைமை வகிப்பார். அரசியலுக்கு அப்பால் வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகள் அவசியம். அவர்களை நாட்டின் தலைவர்களாக உருவாக்க வேண்டும். இளைஞர்களை கட்சியில் இணைப்பது அரசியல் நோக்கத்துக்காகவும், தேர்தல் காலங்களில் பரப்புரை சுவரொட்டிகளையும் ஒட்டுவதற்கு அல்ல. கட்சியின் இளைஞர் அணியின் உறுப்பினர்களுக்கும் வெளிநாட்டில் பல்வேறு தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
கொழும்பில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு வடக்கில் இருந்தும் இளைஞர்கள் அழைத்து செல்லப்படவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 50 இளைஞர்கள் செல்லவுள்ளனர்.
இதேவேளை, கோத்தபாய ராஜபக்ச அடுத்த மாதம் வடக்குக்கான தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5,7,21)

## பருத்தித்துறையில்...

ஈடுபடவில்லை என்று கூறுகின்றனர்.
கடலட்டை பிடிப்பதற்கு நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனை மீறி சட்டவிரோதமாக மீன்பிடியில் வெளிமாவட்ட மீனவர்கள் ஈடுபடுவதாகக் குற்றஞ் சுமத்திய உள்ளூர் மீனவர்கள், நேற்றைய தினம் மதியம் அவர்களை பிடிக்கச் சென்றனர். இதன் போது வெளிமாவட்ட மீனவர்கள் தப்பிச் சென்றிருந்ததாகவும், ஒருவரைப் பிடித்து எச்சரித்து விடுவித்ததாகவும் உள்ளூர் மீனவர்கள் குறிப்பிட்டனர்.
இந்த நிலையில் நேற்றுமாலை கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் முதலாளிகள் சிலர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். தமது மீனவர் ஒருவரைத் தாக்கி உடைமைகளைப் பறிமுதல் செய்ததாக முறைப்பாடு பதிவு செய்தனர். பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைவாக 4 உள்ளூர் மீனவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஒ,5,26)

(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)

## 20 ஆண்டுகளின்...

புக்களில் பிரதான கட்சிகள் கவனம் செலுத்தி வருகின்றன. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனது கட்சியின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை அறிவித்துள்ளது. இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணி தனது கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை நேற்று அறிவித்துள்ளது.
1999ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் போட்டியிட்டிருந்தார். நந்தன குணதிலக அந்தத் தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தார்.
2005ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி மகிந்த ராஜபக்சவை ஆதரித்திருந்தது. 2010ஆம் ஆண்டு மற்றும் 2015ஆம் ஆண்டு தேர்தல்களில் பொது வேட்பாளர்களாகக் களமிறங்கிய சரத் பொன்சேகா மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை மக்கள் விடுதலை முன்னணி ஆதரித்திருந்தது.
இந்த ஆண்டு இடம்பெறும் அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி 22 அமைப்புக்களுடன் இணைந்து மிகப் பெரிய கூட்டணி அமைத்து தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியாகக் களமிறங்கவுள்ளது.
தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வு காலிமுகத்திடலில் நேற்று மாலை இடம்பெற்றது. காலிமுகத்திடலில் சுமார் இரண்டரை லட்சம் பேர் கலந்து கொண்ட கூட்டத்தில் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் அறிமுகம் செய்யப்பட்டார்.
மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர் காளிதாஸ் மற்றும் மாத்தறையைச் சேர்ந்த பேராசிரியர் சுனில் இருவரும் இணைந்து அநுர குமார திசாநாயக்கவை வேட்பாளராக அறிவித்தனர். (ஒ,5,21)

## பிரபாவின்...

முன்னாள் அரச தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார்.
'ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராவதையோ அவர் தலைமையிலான அரசு அமைவதையோ 2005ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் விரும்பியிருக்கவில்லை. அவருடைய வேண்டுகோளுக்கு அமைவாக ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அந்த வருடம் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்திருந்தார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளை தமிழ் மக்கள் இப்போதும் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்றால், ரணில் அரசுக்கு எதிராகவே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வாக்களிக்கவேண்டும்' என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.
மகிந்தவின் கருத்துத் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணிலிடம், வெளிநாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.
அதற்குப் பதிலளித்த ரணில் மேலும் தெரிவித்ததாவது:
மிகப் பெரிய மனித உரிமை மீறல்களைப் புரிந்துதான் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி போரை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தது ராஜபக்ச அரசு. இந்த மனித உரிமை மீறல்களால் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குரிய பதிலடியை 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வழங்கிவிட்டார்கள்.
இம்முறை நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலிலும் ராஜபக்ச அணியைத் தோற்கடிக்கும் வகையில் தமது வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தமிழ் மக்கள் வழங்குவார்கள். அவர்கள் சலுகைகளுக்கு ஒருபோதும் விலைபோக மாட்டார்கள். இந்த நாட்டில் சம உரிமைகளுடன் வாழவே அவர்கள் ஆசைப்படுகின்றார்கள்.
எனவே, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நாட்டில் மூவின மக்களும் சம உரிமைகளுடன் பாதுகாப்புடன் வாழக்கூடியமையை உறுதிப்படுத்தும் அதிகாரப் பகிர்வை வழங்குவதே எமது நிலைப்பாடாக உள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை - என்றார். (ஒ,5,22)

## கொலை...

அறிவிக்கப்பட்ட அநுரகுமார திசநாயக்கா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய மக்கள் சக்தியின் சார்பில் என்னைத் தலைமையேற்க தெரிவு செய்தமைக்காக முதலில் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்மீது நம்பிக்கையை வைத்து தெரிவுசெய்தமைக்கு ஏற்றால் போல் தேசிய மக்கள் சக்திக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் எப்போதும் நன்றியுடையவனாகவும், நம்பிக்கையைக் காப்பாற்றும் நபராகவும் இருப்பேன் என்று உறுதிமொழி வழங்குகின்றேன்.
இந்த அரச தலைவர் தேர்தல் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில் உள்ளது. இதில் இரண்டு தெரிவுகள் மக்களுக்கு உள்ளது. ஒன்று பழைய மோசமான ஊழல்வாத ஆட்சியைக் கொண்டு செல்லும் வழி. மற்றையது மக்கள் மகிழ்ச்சியாக, ஒற்றுமையாக வாழக்கூடிய வழியும் உள்ளது.
காலாவதியான மோசமான ஆட்சி வேண்டுமா? அல்லது மக்கள் நம்பிக்கையுடன் கட்டியெழுப்பக் கூடிய வழி வேண்டுமா? என்பதை தீர்மானிக்க வேண்டிய முக்கிய கட்டத்தில் மக்கள் உள்ளீர்கள்.
இந்த நாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்ற கேள்வி அனைவருக்கும் உள்ளது. முதலில் மோசமான அரசியலை இல்லாது செய்ய வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கம் கொண்ட தொழிலாளர், அதனை ஏற்றுக் கொள்ளும் மக்கள் கூட்டத்தை கொண்டே முன்னெடுக்க வேண்டும். இதில் முதல் கட்டம் எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும், இந்த நாட்டில் அரசியல் ஊழல், மோசடி, கப்பம், அடக்குமுறை என்பவற்றை கையாளும் நபர்களின் கைகளில் இன்று அரசியல் அதிகாரங்கள் உள்ளன. இவற்றை மாற்றியமைக்க வேண்டும்.
இந்த நாசகார ஊழல் மிக்க அரசியலுக்கு அப்பால் தூய்மையான, உண்மையான, மக்கள் நல அரசியலை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியை இதில் நாம் முன்வைக்கின்றோம். இந்த நாட்டின் வளங்கள் அனைத்துமே கைப்பற்றப்பட்டுள்ளன.
சமூகமாக இன்று நாட்டு பிளவுபட்டுள்ளது. சமூகங்களைப் பிரித்து வைத்துள்ளனர். பிளவுபட்ட சமூகத்தை கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. சாதி, மதம், இன பிளவுகளில் இருந்து விடுபட்டு ஐக்கிய நாட்டை உருவாக்கும் சூழலை நாம் உருவாக்கிக்கொடுப்போம்.
எமது எதிர்காலச் சந்ததியினருக்கான உறுதியான நாட்டையும் எமது இளம் சமுதாயத்தினருக்கு நிர்வாகத்தை கையில் கொடுக்க வேண்டும். எமது நாட்டில் அப்பாவி மக்கள் வேதனையுடனும், வருத்தத்துடனும் வாழ்கின்றனர். ஆனால் இந்த வேதனைகளால் மாத்திரம் மாற்றத்தை உருவாக்கிவிட முடியாது. அதனையும் தாண்டி உறுதியான மன நிலையுடன் மக்கள் கூட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கான நம்பிக்கையை இன்று காலிமுகத்திடலில் கூடியுள்ள மக்கள் கூட்டத்தின் மூலமாக எமக்கு கூறியுள்ளனர்.
இதுவரை காலமாக ஏனைய கட்சிகளை ஆதரித்த மக்கள் அனைருக்கும் நாம் இப்போது அழைப்பு விடுக்கின்றோம். அனைவரும் எம்முடன் இணைந்து புதிய பயணத்தை ஆரம்பிப்போம். போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம்.
அதற்கான இன, மத, பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவோம். இனியும் மக்கள் மௌனிகளாக இருந்தால் இந்த நாட்டின் பாதையை மாற்றியமைக்க முடியாது. ஆகவே மக்களுக்கு இருக்கும் மிகவும் முக்கியமான சந்தர்ப்பம் இது. இதில் மக்கள் சகலரும் சரியான தீர்மானத்தை எடுத்து எம்முடன் கைகோர்க்க அழைப்புவிடுகின்றோம் - என்றார். (ஒ,5,21)





## இரண்டு...

ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். இரண்டு வயதுக் குழந்தையை தாய் தூக்கி வைத்திருந்துள்ளார். ஆலய வழிபாட்டை முடித்து வீடு திரும்ப முற்படும்போது குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலி திருடப்பட்டது தெரியவந்தது. (ஒ,5,40)



# யாழ்.பல்கலை அணி அரையிறுதிக்குத் தகுதி

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் யாழ்.பல்கலைக்கழக அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரின் காலிறுதியாட்டம் மொறட்டுவ பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொழும்பு பல்கலைக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி முதலில் கொழும்பு பல்கலைக் கழக அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

களமிறங்கிய கொழும்பு பல்கலைக் கழக அணி 46.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் பெரேரா ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், பதிரன 26 ஓட்டங்களையும், குணவரட்ண 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர், சனிண்டு ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சுபேந்திரன், ஜனந்தன், துவாரகசீலன், டனுஸ்கா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி 40.2 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்து அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அணி சார்பில் துவாரகசீலன் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும், டனுஸ்கா ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் விஜயசிங்க 3 இலக்குகளையும், பாலசூரிய 2 இலக்குகளையும், தென்னக்கோன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஓக.19

நவசத்தி விளையாட்டுக் கழகத்தின் 59ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி பிரிவுக்குட்பட்ட 35 வயதுப்பிரிவினருக்கான அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



## கிண்ணத்தைச் சுவீகரித்தது அரியாலை சனசமூக நிலைய அணி

அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட உள்ளூர் ரீதியிலான மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் அரியாலை சனசமூக நிலைய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை கலைமகள் சனசமூக நிலைய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை கலைமகள் சனசமூக நிலைய அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

63 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை சனசமூக நிலைய அணி 7.3 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் லிதுர்ஜன் 30 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். (23)

## கோலூன்றிப் பாய்தலில் அனிதாவுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம்.ஓக.19

97ஆவது தேசிய மெய்வன்மை போட்டியில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த அனிதா ஜெகதீஸ்வரன், வெண்கலப் பதக்கம் வென்றார்.

நேற்றுமுன்தினம் சுகததாச அரங்கில் இடம்பெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.33 மீற்றர் உயரத்தைத் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றார். கடந்த ஒரு வருடங்களாக உபாதை காரணமாக போட்டிகளில் பங்குபற்றாதிருந்த அனித்தா இந்தப் போட்டியில் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஓக.19

அராலி பாரதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலிகாம கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட சங்கானை பிரதேச அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் கழக மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், கலைநகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான முதலாவது காலிறுதியாட்டத்தில் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும், அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சென்.நியூஸ்ரார் விளையாட்டுக்கழக் அணிக்கும், அராலி வானவில் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான மூன்றாவது காலிறுதியாட்டத்தில் சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நான்காவது காலிறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணியும், அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணியும் மோதின. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி, தோல்வித் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)

## கிண்ணம் வென்றது இணுவில் கலையொளி

அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 7இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் ஜீவிதன் 26 ஓட்டங்களையும். அனோஜன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தமிழன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சுதுமலை சலஞ்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 6இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை மட்டும் பெற்று 33 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. அணி சார்பில் அசி 17 ஓட்டங்களையும். ஜெசி 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜீவிதன். பிரதீஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகன். தொடராட்டநாயகன் விருதுகளை இணுவில் கலையொளி அணி வீரர் ஜீவிதன் பெற்றுக் கொண்டார். (23)



### திமுத்தின் சதம் கைகொடுக்க;

# நியூசிலாந்துக்கு மரண அடி

## சாதனையுடன் வெற்றியைத் தனதாக்கியது இலங்கை





காலி மைதானம் இலங்கை அணி வீரர்களுக்கு கைகொடுக்க நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகள், மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடுகின்றது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் தொடர் காலி மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

நேற்றுமுன்தினம் நான்காம் நாளில் இலங்கை அணி எந்தவொரு இலக்கையும் இழக்காது 133 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் அணித் தலைவர் கருணாரத்னே 71 ஓட்டங்களுடனும், திரிமன்னே 57 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் இணைந்து அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வதில் கவனம் செலுத்தினர். நேற்றைய நாளில் இருவருக்கும் இடையில் 28 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன. திரிமன்னே 64 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். மத்திய வரிசை வீரர்கள் பெரிதாக ஓட்டங்களைக் குவிக்காவிட்டாலும் மறுமுனையில் களத்திலிருந்த திமுத் கருணாரத்னேவுக்கு இணைப்பை வழங்கினர். திமுத் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார். அவர் 122 ஓட்டங்களைப் பெற்று பலிவியன் திரும்பினார். பின்னர் இணைந்த மத்தியூஸ், சில்வா இணை அணியை ஏனைய இலக்குகள் இழக்கப்படாது வெற்றி பெற வைத்தனர். அணி 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக இலங்கை அணித் தலைவர் திமுத் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.





## மீண்டும் தெரிவு செய்ததற்கு நன்றி

### ரவிசாஸ்திரி நெகிழ்ச்சி

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக தன்னை மீண்டும் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுவுக்கு ரவி சாஸ்திரி நன்றி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் உலகக் கிண்ணத் தொடரோடு முடிவடைந்தது. இந்த நிலையில் புதிய தலைமைப் பயிற்சியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதிலும் ரவிசாஸ்திரியே மீண்டும் இந்திய அணியின் தலைமைப்பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

**இது குறித்து ரவிசாஸ்திரி தெரிவிக்கையில்;**

**என் மீது நம்பிக்கை வைத்து** என்னைமீண்டும்இந்தியகிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக்கிய தெரிவுக் குழுவுக்கு நன்றி. இந்திய அணியின் ஓர் அங்கமாக இருப்பது மிகவும் மதிப்பும், மரியாதையுமானது. இந்திய அணி மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

எவரும் சரியானவர்கள் அல்ல. அனைவரும் சில தவறுகளைச் செய்கிறோம். ஆனால் நீங்கள் செய்யும் தவறுகளில் இருந்து கற்றுக் கொள்ளவேண்டும். இப்போது அணிக்கு இளம் வீரர்கள் அதிகம் வந்தவண்ணம் **உள்ளனர். இது மிகவும் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது - என்றார்.**

## கொக்குவில் இந்து அபார வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.19

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவினருக்கான பிரிவு 3க்கான இரண்டாம் சுற்றுத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 182 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌதமன் 62 ஓட்டங்களையும், துவாரகன் 32 ஓட்டங்களையும், டினோஸ்குமார் 31 ஓட்டங்களையும், டினோஸ் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அருள் ஜேசி 3 இலக்குகளையும், கஜீபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 18.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டும் பெற்று 182 ஓட்டங்களால்தோல்வியடைந்தது. அணி சார்பில் திருமாறன் 18 ஓட்டங்களையும், திரிசன் 13 ஓட்டங்களையும், காண்டீபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். கஜனாந், ஜெருசன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், கௌதமன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் ▶ 1024
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.08.17 சனிக்கிழமை

T 08 22 40 65

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
தானியங்கி குரல் பதிவுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.
டிக்கட் விநியோகத்திற்கான உடனடி அழைப்பு 011 4 062 002 / 077 105 4894

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி** அද කෝටිපති ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 704
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 80,866,255/-
வெற்றி இலக்கங்கள் 32 61 63 76 D
விசேட வெற்றி இல. 3583
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 18.08.2019 | 2590 | ஊதா |

கும்பம்
வெற்றி இலக்கங்கள் 19 26 35 60
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,254,432/=

டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 1404
ரூ.100 பரிசுக்காக 312

19.08.2019 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**வீட்டுடன் காணி தேவை**
மானிப்பாய், உடுவில் பகுதிகளில் வீட்டுடன் கூடிய 2 - 4 பரப்பு காணி வாங்குவதற்கு தேவை. (aJe. 22208) (13.17)
077 359 7310

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
புலனாய்வு ரக தூய இன **Labrodor retviler** 40 நாள்களான நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
இடம்: பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி.
077 618 3118

**வீடு வாடகைக்கு உண்டு**
**"இராசமாளிகை"**
**இல.36/14, பிரம்படி லேன், கொக்குவில்.**
(யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில்)
வீடு வாடகைக்கு உண்டு. (CS27476)(13.17)
076 468 6510, 077 191 2584

**கோடிபதி கப்ருக**
சீட்டிழுப்பு வாரம்: 482
திகதி: 2019 ஆகஸ்ட் 16
வர்ணம்: பச்சை வெள்ளி
I 27 28 39 68
3 1 7 2 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.136,193,243/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என் டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

# பார்சிலோனாவை வீழ்த்தி அத்திலெட்டிக் பில்போ அபாரம்



ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டி ஒன்றில் அத்திலெட்டிக் பில்போ அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா - அத்திலெட்டிக் பில்போ அணிகள் மோதிய போட்டியின் முதலாவது அரையிறுதியில் இரு அணிகளும் எந்தவிதமான கோல்களையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு ஆட ஆரம்பித்தன. இரு அணிகளும் சமநிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 89ஆவது நிமிடத்தில் அத்திலெட்டிக் பில்போ அணி வீரர் அர்ருஸ் எதிர்பாராத விதமாக கோல் ஒன்றைப் போட அணி 1:0 என்ற கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு
SPECIAL OFFERS
யாழ்ப்பாணத்தில் 1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்
ரூபாய் 01 இலட்சம் கழிவு
உடனடி உறுதி மாற்றம் * வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

1 ஏக்கர் – 16 பரப்பு
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

28 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)



2 ஏக்கர் – 32 பரப்பு
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

53 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
- 30 அடி, 20அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி · உணவகம் · செயற்கை மழைத் தடாகம் · விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

5 வருட பராமரிப்பு இயற்கை வழியில்
100% ORGANIC



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

-- நல்லூர் உற்சவகால விசேட பணிமனை: நல்லூர் அரசடிச் சந்தி (பாரதியார் சிலையடி) --

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.